JAFFNA COLLEGE
22 MAY 1970
LIBRARY

# தேர்தல் சட்டத்தை எப்படி மதித்து நடக்க வேண்டும்?

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

இனம்! இனம்!!
10 எவர் பிறைற் சோப் (கிழியாத) மேல் உறைகளை சேர்த்து வியாபாரியிடம் கொடுத்து ஒரு சோப் இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
புதிய முறையில் நல்ல தரத்தி தயாரித்து வெளியிடும் எவர் பிறைற் சோப்பைப் பாவித்து அதன் லாபத்தை அடையுங்கள்.
இன்னும் பரிசுத் திட்டங்களை எதிர்பாருங்கள்.
பிறேமா தொழிற்சாலை,
வி. எம். றோட், :-: பருத்தித்துறை.

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

கை 12
இதழ் 100
தேசிய தினசரி



புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து வெளியிடும் எவர் பிறைற் சோப்பைப் பாவியுங்கள்.!
பிறேமா தொழிற்சாலை, பருத்தித்துறை

யாழ்ப்பாணம் வைகாசி 8 ரபி. அவ் 15 வெள்ளிக்கிழமை (22-5-70)

## வடபகுதி பொலிஸ் அதிபரின் "பத்துக் கற்பனைகள்"

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியிலுள்ள வேட்பாளர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் வாக்காளருக்கும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் 'பத்துக் கற்பனைகள்' கொண்ட வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். தேர்தல் வாக்களிப்புத்தினத்தன்று வேட்பாளர்கள் அவர்களது பிரதிநிதிகள் ஆதரவாளர்கள், வாக்காளர்கள் தேர்தல் சட்ட விதிகளை எப்படி மதித்து நடந்துகொள்ளவேண்டுமென்பது பற்றி இவ்வேண்டுகோளில் அவர் சுருக்கமாக விளக்கிக் கூறியுள்ளார். பொலிசார் எவருக்கும் பாரபட்சமாக நடக்கமாட்டார்களென்றும் ஆனல் தேர்தல் சட்ட விதிகளைச் சரியான முறையில் அமுல் நடத்துவார்களென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார்

வடபகுதியிலுள்ள 13 தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ள பத்துக் கற்பனைகளும் வருமாறு'

(1) வேட்பாளர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் (ஏஜண்ட்) வாகனங்களில் பிரயாணம் செய்ய உரிமையுண்டு, ஆனல் அவர்கள் வாக்காளர்களைக் கொண்டு செல்ல அனுமதியில்லை வேட்பாளரே அவரது பிரதிநிதியோ மற்றும் இருவரைத் தமதுவாகனத்தில் கொண்டு செல்ல முடியும்

(2) வேட்பாளரோ அவரது பிரதிநிதியோ, வாக்களிப்பு நிலையத்துக்குக் கால் மைல் சுற்றுடலுக்குள் எந்த விதத்திலும் ஆதரவு தேடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(3) நடக்க முடியாத நிலையிலுள்ள சுகயீனமான வாக்காளர்மட்டும் அரசாங்க அதிபரின் கையெழுத்துடன் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தாலன்றி எவரும் வாகனங்களில் வந்து வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. வாக்காளர் ஒவ்வொருவரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு இ போ சபை பஸ்களிலோ, ரயில்களிலோ அல்லது நடந்துசென்றோ வாக்களிப்பது சிறந்தது என்று பொலிசார் ஆலோசனை கூறுகின்றனர்.

(4) வேட்பாளரோ அவரது பிரதிநிதியோ வாக்களிப்புத்தினத்தன்று வாக்காளர் எவரிடமும் ஆதரவு தேடவோ வாக்காளரைத் தூண்டவோ முடியாது.

(5) வாக்களிப்புத் தினத்தன்று எவரும் துண்டுப்பிரசுரங்களோ, விளம்பரங்களோ, தேர்தல் சின்னங்களோ எங்கும் எந்த இடத்திலும்விநியோகிக்கக்கூடாது காட்சிக்குவைக்கவும்கூடாது

(6) மற்றொருவரின் வாக்கை உபயோகிக்கவோ, மற்றொருவருக்காக வாக்களிக்கவோ எவரும் முயற்சிசெய்யக்கூடாது ஆள்மாறாட்டம் செய்வது மிகப்பாரதூரமான குற்றமாகும்.

(7) வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்குச்சீட்டை எவரும் வெளியே கொண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 'நைலோன் சேட்' வாலிபர்கள் இரவில் திருடுகிறார்களாம்

## குழுவாக இயங்குவதாக பொலிஸ் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

பகல் நேரத்தில் நைலோன் சேட்டும், மடிப்புக்குலையாத கல் சட்டையும், கறுப்புக் கண்ணாடியும் அணிந்து திரியும், கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்த [illegible] பலர் இரவு நேரத்தில் சாரம் அணிந்து, கடைகளில் துணிகர திருட்டுவேலைகளில் ஈடுபட்டுவருவதாக பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். வடபகுதி பொலிசார் இப்பிரச்னையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

18 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய வாலிபர்களே இத் திருட்டு [illegible] பட்டுவருவதாகவும் வேலையில்லாத் திண்டாட்டமும், பணக்கஷ்டமுமே, இதற்கு காரணமாக இருக்கக்கூடுமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், கடந்த 3 மாதங்களில் 4 கடைகள் உடைக்கப்பட்டு திருட்டுச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இக் கடைகளில், ரொக்கப்பணமும், பேனைகளும், சைக்கிள்களும் திருடப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். ஒருகடையில், 22,000 [illegible] ரொக்கப்பணம் திருடப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு நேற்றிரவு இருளில் மூழ்கியது

### -மின்சார ஊழியர் 8 பேர் கைது

சென்னை, மே 21

தமிழ் நாட்டில் மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் தமிழ்நாடு முழுவதும் நேற்றிரவு இருளில் மூழ்கியது.

சம்பள உயர்வு கோரி நடைபெறும் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த உயர்தர மின்சார பொறியியலாளர்களில் 8 பேர் நேற்று கைது செயப்பட்டனர். தமிழ் நாட்டின் அரசுக்கு களங்கம் விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் நாசவேலையை இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்றும் முதலமைச்சர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி கோரி 300க்கும் அதிகமானவர்கள் ஊர்வலமாகச் சென்றனர் அவசர சத்திர சிகிச்சைமுதலியன வேலைநிறுத்தத்தினல் தடைபட்டன. அங்கீகரிக்கப்படாத மார்க்ஸிய யூனியன்களுடன் சமரச பேச்சுவார்த்தைக்கு

## 20,000 கண்கள் தானஞ்செய்ய கைச்சாத்து

கோட்டை, வியாழன்

வெசாக் தினமான நேற்று 20,000 பேர் இறந்தபின்னர் தங்களது கண்களைத் தானம் செய்வதற்கான பத்திரத்தில் கைச்சாத்திட்டனர்.

பிரபல சிங்கள நடிகர் உட்படப் பலர் கண்தான பத்திரங்களில் கைச்சாத்திட்டனர். கொழும்பில் இது நடைபெற்றது.

## பிரிட்டிஷ்கோஷ்டி வெற்றி

கோட்டை, வியாழன்

கொழும்பு சுகதாசா திறந்த வெளியரங்கில் இன்று பிரிட்டிஷ் செளதாம்டன் கோஷ்டிக்கும் இலங்கை கோஷ்டிக்கும் நடைபெற்ற உதை ந்தாட்டத்தில் பிரிட்டிஷ் கோஷ்டியினர் 6 0 கோல்களால் இலங்கைக் கோஷ்டியைத் தோற்கடித்தனர்.

பிரிட்டிஷ் கோஷ்டியுடன் இலங்கைக்கோஷ்டியொன்று 23ம் திகதி மின்வெளிச்சத்தில் விளையாடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காளைமாட்டுச்சின்னம்

## நிஜலிங்கப்பா மனு

புதுடில்லி, மே 20

## 'வேலையில்லா பிரச்னையை நாம் தீர்த்து வைப்போம்'

டி பி இலங்கரத்ன

மாவிட்டபுரம், வியாழன்

திட்டமிட்டு செய்யும் பொருளாதார அமைப்பின் மூலம் தான் இன்று இலங்கை [illegible] யுடன் தமிழ் மக்களிடையே நிலவும் மொழிப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் தமிழ் மொழியின் பிரச்சனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த உயர்தர மின்சார பொறியியலாளர்களில் 8 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டின் அரசுக்கு களங்கம் விளைவிக்கும் எந்த டவடிக்கையையும் தாம் பார்த்றுக்கொண்டு இருக்க முடியாது என்றும் வர்கள் ஊர்வலமாகச் சென்றனர் அவசர சத்திர சிகிச்சைமுதலியனவேலைநிறுத்தத்திஞல் தடைபட்டன. அங்கீகரிக்கப்படாத மார்க்ஸிய யூனியன்களுடன் சமரச பேச்சுவார்த்தைக்கு தாம் தயாராய் இல்லையென்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.


திரியும், கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்த வாலிபர்களே பலர்இரவு நேரத்தில் சாரம் அணிந்து, கடைகளில்

18 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய வாலிபர்களே இத் திருட்டு வேலைகளில் ஈடுபட்டுவருவதாகவுல் வேலையில்லாத் திண்டாட்டமும், பணக்கஷ்டமுமே. இதற்கு

களும் திருடப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். ஒருகடையில்,22,000 ரூபா ரொக்கப்பணம் திருடப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 'சோஷலிஷஅமைப்பில்தான் சமாதானம் நிலவும்'



உடுவில், புதன்

"இலங்கையின் முதலாளித்துவக் கட்சிக்களாயிருந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றில் சுதந்திரக்கட்சியிலிருந்து முதலாளிகளும், இன வெறியர்களும் வகுப்புவாதிகளும் வெளியேற்றப்பட்டபின்னரே அக்கட்சியுடன் சோஷலிஷவாதிகள் சேர்ந்தனர். இன்றைய கூட்டணியின் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காமீது தமிழர் தாராளமாக நம்பிக்கை வைக்கலாம். நீதியான முறையில் தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க கூட்டணிக்கட்சியினர் திட்டம் வகுத்துள்ளனர் என்பதைத் தேர்தல் விஞ்ஞாபனம் காட்டுகின்றது நமது பிரச்னைகளைத் தீர்க்க சிங்கள மக்களுடன் நாம் அன்னியோன்யமாக இருக்க வேண்டும். இடதுசாரிகள் பிரச்னைகளைக் குறுகிய நோக்கில் இல்லாது சர்வதேச ரீதியில் தீர்க்கவே விரும்புகின்றனர்"

உடுவில் தொகுதியின் கூட்டணி வேட்பாளர் திரு. வி. காராளசிங்கத்தை ஆதரித்து உடுவில் கிழக்கில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய காங்கேசன்துறைத் தொகுதி கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. வி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு வி. காராளசிங்கம் பேசியதாவது: "தமிழருக்கு நன்மை செய்வதாகக் கூறும் தமிழ்க்கட்சிகள் உண்மையில் வகுப்புவாதத்தையே வளர்க்கின்றன. இவர்களின் வகுப்புவாதக் கூச்சல் சிங்கள இனத்திற்கு வெறுப்பை ஊட்டித் தமிழருக்கு எதிரான ஒரு வகுப்புவாதக் குரலை எழுப்பச்செய்துள்ளது. நாட்டில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் இவர்களால் ஏற்படுத்தமுடியாது. சோஷலிச அமைப்பின் கீழ்தான் நாம் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழமுடியும்."

# 30 அடிவெள்ளத்திஞல்

## 114 பேர் கொல்லப்பட்டனர்

லண்டன்,ஏப்.21

ருமேனியா பட்டினங்களில் இதுவரை காலமும் ஏற்படாத பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 அடி வெள்ளத்திஞல் பல பண்ணை நிலங்கள் பாழாகியுள்ளன; இதுவரை 114 பேர் கொள்ளப்பட்டுள்ளனர் 36,500 பேர் வீடுகளை இழந்துள்ளனர். பாதிக்கப்பட்டோருள் வடமேல் பகுதியிலுள்ளவர்களே மூன்றிலொரு பங்கினர் என்றும் இறந்தவர் 73 பேர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## பட்டங்கள்பெற்ருர்

உடுவில், வியாழன்

மானிப்பாயைச் சேர்ந்த டாக்டர் செல்வி பாலசிங்கம் எம். ஆர். ஸி. பி (ஸ்பெசலிஸ்ட்) டி. ஆர். ஸி ஓ ஜி. ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளார் இவர் மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியில் அரை நூற்ருண்டுக்கு மேலாக டாக்டராகக் கடமையாற்றிய திரு. வி. பாலசிங்கத்தின் புத்திரியாவார்.

### எதிர் வரும் பொதுத்தேர்தல்:

# 'முதலாளித்துவத்துக்கு எதிரான வழக்கு: எதிரிகள் டட்லி, எஸ்.ஜே.வி., ஜி.ஜி'

— டொறிக் டீ' சூசா

கோப்பாய்,வியாழன்

'எதிர்வரும்பொதுத்தேர்தல் முதலாளித்துவ ஆட்சிக்கெதிராக அவர்களின் அங்கத்துவக்கட்சிகளுக்கெதிராகமுற்போக்குவாதிகளாகிய முக்கூட்டுக்கட்சிகளும் சேர்ந்து நடாத்தும் வழக்குப் போன்றது இவ் வழக்கில் முதலாவது எதிரி திரு. டட்லிசேனநாயகாவும் இரண்டாம் எதிரி திரு. செல்வநாயகமும் மூன்ரும் எதிரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் ஆவர். ஒப்பந்த அடிப்படையில் இரகசியமான முறையில் ஆட்சியைக் கைப்பற்றியது, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதது ஏழைகளின் வாழ்க்கைச் செல்வை உயர்த்தியது நாணயமதிப்புக் குறைககப்பட்டது ஆகியவையே நாம் அவர்கள்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளாகும். ஜூரர்களாகிய பொதுமக்களே அவர்களுக்கு எதிரான முறையில்தீர்ப்பளிக்கவேண்டும் முதலாளித்துவத்துக்கெதிரான போராட்டத்திற்கு உதவியாக விருந்து, முதலாளித்துவ வாதிகளை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தி சோஸலிசப் பாதையைப் பரவச்செய்து புதிய சகாப்தத்தை உண்டாக்க அனைவரையும் முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.'

மேற்கண்டவாறு நேற்று மாலை அச்சுவேலியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்னைநாள்செனட்டர் திரு டொறிக் டி சூசா கூறிஞர்.

கோப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு எம். துரைராசாவை ஆதரித்து திரு. என். பொன்னுக்கோன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கோப்பாய் வேட்பாளர் திரு. துரைராசா பேசுகையில்:- 'நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலின் பின்னர் தமிழரசுககட்சியை யூ. என். பி யோ, கூட்டுக்கட்சியினரோ சேர்க்கப்போவதில்லை. அத்துடன் அவர்கள் நேரடியாக அரசை அமைக்க சக்தியற்றவர்கள். அரசியலில் தரகர்களாக விளங்குபவர்கள் தமிழரசுக் கட்சியினரும், காங்கிரஸ் கட்சியினரும் அவர்கள் ஆட்சிமன்றத்தின் உள்ளும் புறமும் தங்கள் பிரசாரம் செய்தார்களே தவிர தமிழர்களின் பிரச்னைகளைச் சிந்திக்கவில்லை. பிற்போக்கு வாதிகளுக்கு மீண்டும் இடமளிக்காது நேரடியாக அரசாங்கம் அமைக்கத்தக்கமுற்போக்குச் சக்திகளுக்கு ஆதரவளித்து எதிர்வரும் அரசிய புரட்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்ருர்.

கலாநிதி ஒஸ்மன்ட் ஜெயரத்திஞ, எஸ். கணேசன், எம். சி. சுப்பிரமணியம், வி. சச்சிதானந்தம் உட்பட பலர்பேசினர்.

காலைமாட்டுச்சின்னம்

## நிஜலிங்கப்பா மனு

புதுடில்லி, மே 20

காங்கிரஸ் கட்சியின் காளைமாட்டுச் சின்னம் யாருக்குச்சொந்தமென்பது பற்றி தேர்தல் கமிஷனர் விசாரணை நடத்துவதை ஆட்சேபித்து திரு. நிஜலிங்கப்பா தாக்கல்செய்த மனுவை விசாரிப்பதற்கு சுப்ரீம் கோர்ட் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனுல் இடைக்காலத் தீர்ப்பொன்றை வழங்க கோர்ட் மறுத்து விட்டது.

## இன்று

புங்குடுதீவு,வெள்ளி

புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவிலில் இன்று பூங்காவனத் திருவிழா நடைபெறும், விசேஷ மேளக்கச்சேரியும் இடம் பெறும்.

டி பி இலங்கரத்ஞ

மாவிட்டபுரம், வியாழன்

திட்டமிட்டு செய்யும் பொருளாதர அமைப்பின் மூலம் தான் இன்றுஇலங்கை பூராவும் உள்ள வேலையற்ற பிரச்னையை தீர்க்கலாம். இப்படியான அமைப்பு அமைக்கும் கட்சிக் கூட்டணிதான். ஆகவே இம்முறை நூற்றுக்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று பிரச்சனைகளை தீர்க்க முன்நிற்போம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரப் கட்சிபிமுகர் திரு. ரி, பி. இலங்கரத்திஞ உடுவில் சமசமாஜி வேட்பாளர் திரு. வி. காராளசிங்கத்தை ஆதரித்து சுன்ஞகம் பஸ் நிலையத்துக்கருகில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறிஞர்.

மாஜி செனட்டர் திரு. பி. நாகலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

சிங்கள மக்களின் உதவியுடன் தமிழ் மக்களிடையே நிலவும் மொழிப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டும் தமிழ் மொழியின் பிரச்சனை திர்க்க எமது கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் இணைத்து தமிழருக்கு உரிமைவழங்குவோம்.

அரசியலில் யூ. என். பி: தமிழரசு காங்கிரஸ் என்ற முதலாளித்துவ கூட்டணி ஒன்று. மற்றது ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட், சமசமாஜ கூட்டணியாகும் யூ என். பி. கூட்டணி முதலாளித்துவத்துக்கு முதலிடம் அளித்து அவர்களை திருப்திப்படுத்தி சிறுபான்மை மக்களை கஷ்டத்துக்குள்ளாக்குகிறது.

வாழ்க்கைத்தரம் 65-ம் ஆண்டுக்குமுன் 112 ஆக இருந்தது. இந்த தேசிய அரசு ஆட்சிக்கு வந்ததும் வாழ்க்கை தரம் 138 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் யார்?

அரிசியை நாம் 2 காத்தாக கொடுத்தோம். ஆஞல் தேசிய அரசு அவ்வரிசியை அரையாசியாக்கி 1 கொத்து அரிசியைதான் விநியோகிக்கிறது. ஏழை, பாமர, விவசாயமக்கள் பெரிதும் கஷ்டமுறுகிருர்கள் எமது கூட்டாட்சி ஆட்சிக்கு வந்தால் கட்டாயம் 2 கொத்து அரிசி வழங்குவோம்.

சுழிபுரம் வியாழன்

திருமுருக கிருபானந்தவாரியார் ஜூலைமாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருகின்ருர். காரைநகர் சிவன்கோவில் கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்ளவே விசேடமாக வருகின்ருர்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களை "ஈழம்" என்றுஅழைப்போம்!

## தமிழர் சுயாட்சிகழக தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது

யாழ்ப்பாணம்,வெள்ளி

வடக்கு — கிழக்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் எமது தாயகத்திற்கு வரலாறு கூறும் அதன் தொல்பெயரான 'ஈழம்' என்ற பெயரைச்சூட்ட இறுதிவரை உழைப்போம், 'ஈழம்' எங்கள் தாயகம் என்று முழங்குவோம்,

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் புகட்டப்படுவதை வன்மையாக எதிர்க்கிருேம்,

தமிழினததின் அறிவியல் வளர்ச்சிக்கா ஆங்கிலம் இரண்டாவது பாடமாக அமைய வேண்டும்.

தமிழ் மக்களின் கல்விமொழி பாலர்வகுப்புமுதல் பல்கலைக்கழகம்வரை தமிழாகவே இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி முன்னுள் எம். பி. திரு வி. நவரத்தினத்தின் தலைமையில் இயங்கும் தமிழர் சுயாட்சிக்கழக தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

கடந்த ஐந்தாண்டு கால அரசியல் சம்பவங்கள்யாவும் ஈழத் தமிழினம் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியாது என்ற நிலைக்கு எம்மைத் தள்ளி விட்டுள்ளன அதஞல் சங்கிலி அரசன் காலத்தோடு மாண்டு போன தமிழ்இராச்சியத்தை மீண்டும் நிறுவும் உன்னத இலட்சியத்திற்காக ஈழத் தமிழினத்தின் கடைசிக் கட்ட அரசியல் கோரிக்கைக்காக எமது கழகம் பணியாற்றும். எமது நிலப்பரப்பிற்கு வட-கிழக்கு மாகாணம் என்று எல்லை வகுத்து மாகாணப் பிரிவினைக்கு இடம் கொடாது, 'ஈழம்' என்ற பெயரைச் சூட்டியுள்ளோம் அதுவுமன்றி, மதத்தால் வேறுபட்டாலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சகலரையும் தமிழினத்தவரெனக் கணிக்கிருேம். 'தமிழ் பேசும் மக்கள் என்று கூறி மத பேதத்திற்கு இடம் கொடுக்கமாட்டோம்

### கொள்கைகள்

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை தமிழினம் வாழையடி வாழையாக வாழ்ந்துவந்த நிலப்பரப்பு இலங்கையின் புவியியல் அடிப்படையில் சுருங்கிஞலும் தனியாக இன்றும் இருககிறது. இந் நாட்டை இன்ஞேர் நாட்டின் (வட-கிழககு) மாகாணங்களாக மதியீனத்தை ஒழித்து எமது தாயகமாகப் பாதுகாககும் கடமையைக கழகம் செய்யும். இதன் அடிப்படையில் எமது தாயகத்திற்கு வரலாறு கூறும் அதன் தொல் பெயரான ஈழம் என்றபெயரைச் சூடட முடிவு செய்துள்ளோம், ஈழம் எங்கள் தாயகம் என்று முழங்குவோம்,

இலங்கையில் வாழும்உரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டு கடடாயநாடுகடத்தலுககு இலககாகியிருக்கும் மலைநாடடுத் தமிர்களுககாக கழகம் உழைககும் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து வாழ்ந்து வந்தோ அதன் பின்னர் இலங்கையில் பிறந்தவர்களுககோ இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும், மலைநாடடுத் தமிழரையும் ஈழத் தமிழரையும் இன ரீதியில் ஒற்றுமைப்படுத்தி ஒன்றுபடட தமிழினத்தை கழகம் உருவாக்கும்,

# 'இரத்தக்களரியைத் தடுக்கவே வந்தேன்'

— ஸி: சுந்தரலிங்கம்

மாவிடடபுரம் வியா

'நான் தாழ்த்தப்படட மககளின் துரோகி அல்ல. நான் மாவிடடபுரம் கந்தசாமி கோவிலில் பலாத்கார ஆலயப்பிரவேசம் தலைதூககி இரத்தககளரி ஏற்படாமல் தடுககவே வந்தேன்.

இவ்வாறு காங்கேன்துறை தொகுதியில் போடடியிடும் திரு. செ. சுந்தரலிங்கம் தம்மை ஆதரித்து தெல்லிப்பளை அம்பனையில் நடந்த பிரசாரக் கூடடத்தில் பேசுகையில் கூறிஞர்.

திரு எஸ் வல்லிபுரம்தலைமையில் நடநத இககூடடத்தில் அவர் தொடர்ந்துபேசுகையில் இலங்கையில் தமிழ் மககள் சுதந்திர புருஷராக வாழ்வதற்கு எந்த ஒற்றையாடசியோ, சமஷ்டியோ, அல்லது மாவடடசபையோ வழிவகுககாது. சாம பேத தான தண்டம்என்ற மூன்று வழிகளையும் கைக கொண்டு தனியரசு அமைப்பதன் மூலம் தான் 5000 ஆண்டாக வாழும் ஈழத் தமிழ் இனம் தனது சுய கௌரவத்துடன் வாழ வழி பிறககும்

பிரம ஸ்ரீ சு, து சண்முகநாதக குருக்கள் பேசுகையில்:- 20 வருடங்களாக மொத்தவியாபாரிகள்போல எல்லாத் தொகுதிகளையும் கொள்வனவுசெய்து சென்ற தமிழரசுககட்சிதமிழ் இனத்துககு துரோகம் செய்து விட்டது' என்ருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

காணி.

பருத்தித்துறை தும்பளைக் கடற்கரை வீதியில் கத்தோலிக்க கன்னிகாமாட பாடசாலைக்கு அருகாமையில் 6 3/4 பரப்புக் காணியும், சிறு வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தா. வன்னியசிங்கம், புறக்டர், பருத்தித்துறை. 2126

புஸ்தகங்கள்:

கந்தபுராணம் 6 காண்டம் பொழிப்புரை, கந்தபுராணம் 6 காண்டம் மூலம், கந்தபுராண வசனம் ஆறுமுகநாவலர் பதிப்பு, பெரியபுராணம் செய்யுள்-நாவலர், திருவிளையாடல் உரையுடன், தாயுமானவர் உரை, வேறு புராணங்களும் உரையுடன். ஆங்கிலம், கணிதம் படிப்பித்தல் முறை ஆங்கிலம் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் முதலியனவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:பொ. தியாகராசஐயர், அம்மன்கோவில் வீதி, சுதுமலை. 2127

காணி:

9 3/4 ஏக்கர் காணி சங்கத்தாவயல் இயக்கச்சியிலுள்ளது. தனிப்பட்ட சொந்தக் காணியும், கண்டி, யாழ்ப்பாணறோட்டு முகப்பும், ரயில் றோட்டு எல்லையுமானதும் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: த. சபாரத்தினம், "கமலவாசா", அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. 2128

## மரண அறிவித்தல்

### நீ. வரோணிக்கா

காலஞ்சென்ற சண்டர் சின்னத்தம்பி நீக்கலஸ் அவர்களின் மனைவியும் சேவியர் புகையிரதப்பகுதி, இம்மானுவல் புகையிரதப் பகுதி, ராணிவிக்ரோறியா, சூசைப்பிள்ளை "யாழ்பகவான்", திருச்செல்வம் புகையிரதப்பகுதி, பெர்ணுண்டோ புகையிரதப் பகுதி, ஆகியோரின் தாயாரும் யோண் திரேசம்மா, அன்ரனி ஆகியோரின் சகோதரியுமான நீக்கலஸ் வரோணிக்கா காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4-30 மணியளவில் ஆசனக்கோவிலைச் சேர்ந்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 2129

## இன்றைய பலன்

வைகாசி மீ 8-ம் திகதி [21-5-70]

**மேஷம்-** தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும். பிணிக்கு இடம் கொடாது உடல்நலத்தைப் பேணவும்,

**ரிஷிபம்-** குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். களஸ்திர வழியால் இலாபமும் கிடைக்கும்.

**மிதுனம்-** குறைகேட்க நேரிடும். கடமையில் தடை தோன்றும்' நாவடக்கம் நன்று.

**கடகம்-** உறவுமுறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர். வாழ்த்துமுண்டு.

**சிம்மம்-** பொறியியலாளருக்குப் பொன்னுன தினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தாப்பமுண்டு.

**கன்னி-** பொருள்வரவு உபசாரம் பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாக மூட்டும் செய்தியும் கிடைகும்,

**துலாம்-** தொழிலாலே தொல்லை தோன்றும் இறை வழிபாடு நன்று.

**விருச்சிகம்-** அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம்பெறலாம். ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு,

**தனுசு-** தொடர்புகளைப் பெருகவைக்கும். தள்ளிவைத்த மக்களெல்லாம் உம்மை அள்ளி அணைத்திடுவார்.

**மகரம்-** வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தால் நன்று.

**கும்பம்-** தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவு பெறும். தாய்வழிப்பெருமையுண்டு. வாகனநலனுடன் வாழ்விலும் சுகம்காணும்.

**மீனம்-** கன்னல் போல் வாழ்வு. பின்னல்போல் மறையும். இன்றே வாட்டிடும் பிணியும் தானே.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

6வது வாரம்

சிவாஜி, கே ஆர் விஜயா நடித்த


# வேட்பாளர் அறிமுகம்

## யாழ்ப்பாணம்

### திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் [தமிழ் காங்கிரஸ்]

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தாபகரும் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இன்றைய தமிழ் அரசியல் வாதிகளுள் முதிர்ச்சிபெற்றவர்.



ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டிருக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 1933-ம் ஆண்டிலேயேஇலங்கைச் சட்டசபைக்கு பருத்தித்துறைத் தொகுதியின் உறுப்பினராகத்தெரிவுசெய்யப்பட்டவர்.

தமிழ்மக்கள்இலங்கையின் எப்பகுதியிலும் உரிமையுடனும் கௌரவத்துடனும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்ற கொள்கையுடையவர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம். சட்டசபைக் காலந்தொடங்கி தமிழனின் தனிக்குரலாக ஒலித்துக்கொண்டிருந்தவர்.

'தமிழன் என்று
சொல்லடா
தமிநிமிர்ந்து
செல்லடா

என்ற சுலோகத்தைச் சொல்லி 1947-ம்ஆண்டிலே நடைபெற்ற முதலாவது ஆட்சிமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தனித்துவமான செல்வாக்குடன் காங்கிரஸ்விளங்கியது.

இலங்கையின் அரசைக் கவிழ்க்க நடந்த முதலாவது சதிவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடியபோது இவரது சட்ட நுணுக்கம் பலராலும் பாராட்டப்பட்டது. சதி வழக்கில் குற்றம்சுமத்தப் பட்டோருக்கு விடுதலைபெற்றுத் தந்தவர்.

1965-ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஐ.நா. சபையில் முதன் முதலாக கலந்துகொண்டார். தனது நாவன்மையினுலும் தர்க்கரீதியான வாதத்தினுலும் பெருமை தேடித் தந்தவர் இதன் காரணமாக 1966-ம் ஆண்டிலும் இலங்கையின் பிரதிநிதியாக மீண்டும் அங்கு சென்று கலந்துகொண்டார்.

இலங்கையின் எப்பகுதியிலும் தமிழ்மொழிபேசுபவர்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமென்பதே இவரது அடிப்படைக் கொள்கைகளில் முன்நிற்பது.

சோல்பரிப்பிரபுவுக்குமுன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நிகழ்த்தியஉரை சரித்திரமுக்கியத்துவம் பெற்றதாகும். 1958-ம் ஆண்டுக் கலவரத்தை அடுத்து வந்த பாராளுமன்றக் கூட்டத்தில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வெகு ஆணித்தரமாக இவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

0 0 0

### திரு வி எக்ஸ் மார்டீன் (தமிழரசுக் கட்சி)

இலங்கைத்தமிழரசுக்கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் திரு. வி. எக்ஸ். மார்டீன்



யாழ்ப்பாணத்திற்குப் புதிய வரலல யாழ். தொகுதியில் தமிழரசு வேட்பளராக திரு மார்டீன் முதன்முதல் 1965ம் ஆண்டுத் தேர்த[illegible] ஸ்தானத்தைப்பெற்ருர்.

[illegible]யின் இலட்சியத்தை அடையும் பொருட்டு பலதரப்பட்ட கஷ்டநஷ்டங்களைச் சகித்து வந்திருக்கிருர்கள்.

எமது நண்பர்களான சிங்கள மக்களுக்கு நாங்கள் எதிர்ப்பானவர்களல்லர் இரண்டரந்தப் பிரஜைகள் என்ற நிலைக்கு நாம் தள்ளப் படுவதை மட்டுமே நாம் ஆட்சேபிக்கின்றேரும் அரசாங்கங்களோடு எதிர்த்துப் போராடவேண்டிய நிலை எமக்கு நேரிடலாம். எமது சகோதரர்களான சிங்கள மக்களுடன் நாம் சண்டை போடமாட்டோம்." எனக் கூறும் திரு. மாட்டீன்.

"யாவற்றிற்கும் மேலாக எந்தத் தேர்தலில்தானும், ஏன் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் கடவுளின் கிருபையும் சம்பந்தப்பட்ட சகலர்து நல்லெண்ணமும் இல்லாது வெற்றியடைய முடியாது" என்கிருர்

0 0 0

### திரு. அல்பிரட் ரி. துரையப்பா (சுயேச்சை)

தமிழ்மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிளங்கும் கட்சிகளான இலங்கைத் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளையும் சுயேட்சையாக எதிர்த்துப் போட்டியிடுகிருர். திரு. அல்பிரட் ரி. துரையப்பா.



1951-ம் ஆண்டுஉள்ளூராட்சி மன்றத்தில் ஓர் அங்கத்தவனுக அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவர் திரு. துரையப்பா. இவர் உள்ளூராட்சி மன்றத்துக்குள் புகுந்த ஆரம்பகாலமாகிய 1951-ம் ஆண்டுதொடக்கம் மூன்ருண்டு காலத்துக்கு யாழ்ப்பாண மாநகரசபையின் உதவிமேயராகப் பணிபுரிந்தவர்.

1958-ம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராகப் தெரிவுசெய்யப் பட்டார். 1958 தொடக்கம் 1960 வரையுள்ள இடைக்காலத்தில் இவருக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களிடத்தில் மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது.

யாழ்ப்பாணப் பட்டினத்தின் தண்ணீர்த் திட்டம், வீதிகள் விஸ்தரிப்பு என்பன தன்காலத்திலேயே ஏற்பட்டன என்று தெரிவிக்கிருர் இவர். யாழ்ப்பாண பொதுஜனநூல் நிலையம் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கு இவர காலத்திலே தான் நிறைவுபெற்றன வென்றும் கூறுகின்ருர். யாழ்ப்பாண முதல்வராக இவர் பதவி வகித்தகாலத்திலே அதாவது 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஆட்சி மன்றத் தேர்தலில் முதன்முதல் போட்டியிட்டார். இந்தத் தேர்தலில் போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி, ஜி. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் திரு. கதிரவேற்பிள்ளை இருவரையும் இவர் தேர்தலில் வெற்றிகண்டார்.

1960-ம் ஆண்டு யூலையில் நடைபெற்ற இரண்டாவது தேர்தலிலும் மேற்படி இருகட்சியினரையும்வெற்றி கண்டவர். இவர் தமிழ்மொழி உரிமைப்போராட்டங்களில் நேரடியாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் அந்தப் போராட்டங்களை தாம் ஆதரித்தே வந்ததாகக் கூறுகின்ருர்.

இம்முறை தம்மை ஆட்சி மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யும் பட்சத்தில் மொழியுரிமை பற்றியவிடயங்களில் தமது ஆதரவை எவருக்கும் கொடுக்கத்தயங்க மாட்டேனென்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பட்டினத்துப் பொது மக்களுடைய முன்னேற்றமே எனது இலட்சியம்என்றுகுறிப்பிடும் திரு. அல்பிறட் ரி. துரையப்பா குறிப்பா ஏழைமக்களின் தொண்டனுகவே யான் பணிபுரிவேன் என்கிருர்.

இவர் யாழ்ப்பாணத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் பயின்ற இவர் பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று இப்போது யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராகவும் கடமை புரிகிருர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 22—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்

# 'தமிழரசுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?"

உடுவில், வியா

'தமிழ்மக்கள் இரண்டாம் தரபிரஜைகளாக வாழ ஒருபோதும் விரும்பமாட்டார்கள். உரிமைபெறும் வரை தமிழினம் ஓயமாட்டாது. தமிழினம் உரிமைபெற்று சிங்கள இனத்திற்கு சிறிதளவேனும் குறையாத அந்தஸ்துடன் திகழவேண்டும். இதனைமனதில் கொண்டே தமிழ் மக்கள் தமிழரசுககு வாக்களிக்க வேண்டும்.'

என மானிப்பாயில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் தேர்தல் கூட்டத்தில் பேசிய உடுவில் தொகுதி வேட்பாளர் திரு வி. தர்மலிங்கம் கூறினுர்.

உடுவில் கிராசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழினத்தின் உரிமைகளைப் பெறநாம் போராடிய காலங்களிலும் எங்களால் எடுககப்பட்ட சகல முயற்சிகளுக்கும் தடையாக இருந்தவர்கள் தமிழ்க்காங்கிரஸ் காரர்கள், மாவட்டசபை மசோதாவை எதிர்த்தவர்கள் தமினத்தின் கல்விநிலையையே பாதிககுமளவிற்கு கிடைக்கவிருந்த பல்கலைக் கழகத்ததயும் இல்லாமல் செய்துவிட்டார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் தமிழ்ப் பிரதிநிதிகள் தான் இந்த காங்கிரஸ்காரர்கள்.

# 'அவர்கள் வருவதை நாம் முற்றுக எதிர்க்கின்ருேம்'

மாவிட்டபுரம், வியா.

'தமிழரசுக் கட்சியை தமிழ்மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும் எனக கூறுவது அவசியமாகும். தமிழ்மக்களை அழிக்க சிங்கள அரசுகள் நடவடிக்கை எடுத்தபோதெல்லாம் அவற்றை எதிர்த்து நடவடிக்கை எடுத்து தடுத்த காரணத்தினுல் தமிழ் மக்கள் கட்டாயம் தமிழரசுக்கட்சியை ஆதரிக்க வேண்டும்"

இவ்வாறு தெல்லிப்பளையில் நடந்த தமிழரசுக் கட்சிப்பிரசாரக் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினுர்.

"தமிழ்இனம் சிங்கள இனத்தைப்போல சுதந்திரத்துடன் வாழவேண்டுமானுல் தமிழரசுக்கட்சியின் 19வேட்பாளர்களையும் ஒரேமுகமாக ஆட்சிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்."

கல்விமந்திரி ஈரியகொல்லை தமிழ்ப்பிள்ளைகளை சிங்களப் பிள்ளைகளாக்க முயற்சிசெய்கிருர். சிங்களத்தைப் போதனுமொழியாக்கி தமிழ் மொழியை அழிக்கப்பார்க்கிருர். சிங்கள அரசுகளினுல் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம்நடக்கின்றது. தெற்கிலிருந்து 250 பேர் இம்முறை தேர்தல்வேலைபார்க்க வடக்குக்கு வருவதை நாம் முற்றுக எதிர்க்கிறேம்." என திரு. செல்வநாயகம் தெரிவித்தார்.

திரு. எஸ். சந்திரகாசன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

பொதுவாக தனிப்பட்ட வகையில் பொதுமக்களுடன் தொடர்புடையவர் திரு. அல்பிறட் துரையப்பா யாழ்ப்பாணம் மாநகரசபையில் இவருக்கென்ற தனிப்பட்ட ஒரு குழு இயங்குமளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது,

## வீணைவித்துவான் பாலச்சந்தர் வெளிநாடு செல்கின்ருர்

சென்னை, மே. 21

வீணை வித்துவானும், பிரபல திரைப்படடைரக்டரும் நடிகருமான எஸ். பாலச்சந்தர் வெளிநாடு செல்லுகின்ருர்.

பிரான்ஸ் நாட்டின் கலாச்சாரக் கழகத்தின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும்படி விடுத்த அழைப்பை ஏற்று பாலச்சந்தர் செல்லுகின்ருர்.

இவர் ஐரோப்பாவில் ஒன்றரை மாதம் சுற்றுப்பிரயாணம் செய்து பல வீணைக்கச்சேரிகள் நடாத்துவார். மேற்கு ஜேர்மனி, சுவிற்சலாந்து ஆகியநாடுகளுக்கும். செல்லவிருககிருர்.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்யப்படும். 2129


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
6வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா நடித்த
# திருடன்

வின்ஸர் 6 வது வாரம் தினசரிபி.ப.2-30 6-30
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
# தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

தினசரி: காலை 10-30 இரவு 9-45
ரி. ஆர். ராமச்சந்திரன்—தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த
# அடுத்தவீட்டுப் பெண்

# வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ நம்பியார் மாறுபட்ட புதுப் பாத்திரமேற்று நடித்து மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த சித்திரம்



கிருஷ்ணகுமாரி
புஷ்பலதா
நாகேஷ்



முத்துராமன்
வி.கே.ராமசாமி
கண்ணன்
மற்றும் பலர்
நடித்த
# சுப தினம்
டைரக்ஷன்: ஸ்ரீகாந்த்


நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம். 4-28 சங்கமம் 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 வீணை, 7-45 விளையாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
நாகேஷ்வர ராவ்-சாவித்திரி
நடித்த
எங்க வீட்டு மகாலட்சுமி

## ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
ஷம்மிகபூர்- ராஜ்ஸ்ரீ
நடித்த
பிரம்மச்சாரி
(ஹிந்தி-கலர்)

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன்
நடித்த
பக்த பிரகலதா

## MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya&Public Holidays
4 shows
Mike Henry,
Jane Murray
in
TRAZAN AND THE GREAT RIVER
(Scope-color)

## REGAL JAFFNA
Daily 4 Shows
PILGRIMAGE TO MECCA
மெக்கா யாத்திரை
colour)




மார்ட்டீன் முதன்முதல் 1965ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டு 2வது ஸ்தானத்தைப்பெற்ருர்.

யாழ்ப்பாணத்தையே பிறப்பிடமாகக்கொண்ட இவர், யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியின் பழையமாணவராவர்.

சட்டக்கல்லூரியில் பயின்று நியாயவாதியாக வெளியேறிய திரு. மார்ட்டீன் மாவட்ட நீதிபதியாகப்பணியாற்றி ஒய்வுபெற்றவர்.

உயர்நீதிமன்ற வழக்குரைஞராகவும், இலங்கை நீதிபரிபாலன சேவையின் ஓர் உறுப்பினராகவும் கடமையாற்றியவர். இங்கிலாந்து நீதிமன்றங்களிலும் இவர் அனுமதிக்கப்பட்டார்.

இலங்கை நீதிபரிபாலன சேவையின் வகுப்பு 1 தரம் 1 நீதிபதியாகஇருந்து இளைப்பாறிய இவர் தொடர்ந்து டைம்ஸ் குழுவைச் சேர்ந்த செய்திப் பத்திரிகைளின் நிர்வாக அதிபராவுர். மெசேஸ் டி சில்வா அன்ட் மென்டிஸ் சட்ட நிறுவனத்தின் பங்குதாரராகவும், கிருண்ட் ஒறியன்ரல்ஹோட்டல், மவுண்ற் லவினியா ஹோட்டல் ஆகியவற்றின் தலைவராகவும், தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினரால் நடாத்தப்படும் உயர் கல்வி நிறுவனமான நாவலர் கழகத்தின் ஆளுனர் சபைத் தலைவராகவும், கழகத்தின் அதிபராகவும், வைத்தியசாலை அதிர்ஷ்ட லாபச் சீட்டுச்சபையின் தலைவராகவும், இலங்கைப் பல்கலைக் கழக ஆட்சிச் சபையின் உறுப்பினரில் ஒருவராகவும் இருந்துள்ளார்.

1969ம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் ராணுவத்துருப்பினர்களுக்குமிடையே நேரிட்ட கலவரங்களின் விசாரணை செய்த விசாரணைக்குழுவின் தலைவராகவும் பல்கலைக் கழக மாணவர் மத்தியில் காணப்படும் கொந்தளிப்புக்கான காரணங்களை ஆராய்ந்தகுழுவின் தலைவராகவும் இருந்துள்ளஇவர். உயர் கல்விக்கான பிரச்னைகளில் இருக பிணைக்கப்பட்டவராகவும் இருந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை வட்டார எல்லை நிர்ணை கமிஷனராகவும் இவர் கடமையாற்றிஞர்.

"நான் எனது எதிர்வேட்பாளரை அழிப்பதற்காகவோ விலக்குவதற்காகவே வரவில்லை. நாம் ஒரு இலட்சியத்திற்காக, தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்விற்காகப் போராடி வருகின்ரேம். எமது கட்சியின் உறுப்பினர்கள் கட்சி

பணிபுரிந்தவர்.

1958-ம் ஆண்டு யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராகப் தெரிவுசெய்யப்

போது யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராகவும் கடமை புரிகிருர்.

பட்ட ஒரு குழு இயங்கு மளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

# இதோ!
உங்கள் பயிர்களின்
ஆரோக்கியத்தைப்
பேணும் பவர்ஸ்
விவசாய ரசாயனப்
பொருட்கள்!



**எக்கலொக்ஸ் 50**
உடனுக்குடன் செயலாற்றும் வன்மையும் நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் தன்மையும் கொண்ட சக்தி மிக்க இக் கிருமி நாசினி நெற்பயிர், புகையிலை, மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் காய்கறிச் செடிகளைத் தாக்கும் சகல கிருமிப் பீடைகளையும் அழிக்க வல்லது.

**டீஸேல் 25**
நெற்பயிர், மரக்கறி, பழ மரங்கள் முதலியவற்றின் இலைகளை உண்ணும் மயிர் கொட்டிகளை அழிக்கக் கூடிய கிருமி நாசினி.

**தியோவிற**
சிற்றுண்ணி, ஏப்பிட்டுகள் (அழுக்கணவன்), திறிப்ஸ் (பனிப்பூச்சி) போன்ற சிறு பூச்சி இனங்களை ஒழிக்க வல்ல இந்தக் காளான் நாசினியை டீஸேல் 25 உடன் கலந்து உபயோகிக்கவும். மிளகாய்ச் செடியில் உண்டாகும் குருமன் நோயை அறவே அழிக்கவல்லது என யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரியினல் சிபார்சு செய்யப்பட்டது.

**டைமெகுரோண 100**
தாவரத்தில் ஊடுருவக்கூடிய இக் கிருமிநாசினியை செடியின் எப்பாகத்திலும் தெளிக்கலாம். அரிக்கும், உறிஞ்சும், உண்ணும் பூச்சிகள், தண்டு கோதிகள் போன்றனவற்றை அழிக்க அதி சக்தி வாய்ந்தது.

**மிலடொகஸ 50**
மரக்கறி, உருளைக் கிழங்கு, பழவகை முதலிய செடிகளில் உண்டாகும் எரிவந்தம், புள்ளி விழுதல், பூஞ்சண நோய் ஆகியவற்றிற்கு உபயோகிக்க மிகச் சிறந்தது.

**பென்பார் 50**
நெற்பயிர், காய்கறிச் செடிகள், பழ மரங்கள் முதலியவற்றை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த கிருமி நாசினி.

பயிர்ஆரோக்கியத்துக்குப் பக்கத்துணை பவர்ஸ் விவசாய ரசாயனப் பொருட்களே.

விபரங்களுககு எழுதுக:
## ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்
விவசாய சேவை,
த. பெ. 11, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்போடியா: சர்வதேச மாநாடு

# பிரிட்டிஷ் யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்து விட்டது

**லண்டன், மே 20**

**கம்போடியாவில் எழுந்துள்ள நிலைமைகள் குறித்து ஆலோசிப்பதற்கு சர்வதேச மாநாடொன்றைக் கூட்ட வேண்டும் என்று பிரிட்டன் தெரிவித்திருந்த யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்து விட்டது**

கம்போடியாபற்றிய சர்வதேச மாநாடொன்றை நடத்தவேண்டும் என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. மைக்கல் ஸ்டுவார்ட் யோசனை தெரிவித்திருந்தார். அந்த யோசனைக்கு சோவியத் யூனியன் தெரிவிக்கும் பதில் நேற்று பிரிட்டிஷ் அரசிடம் கையளிக்கப்பட்டது இந்தப் பதிலில், பிரிட்டிஷ் யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்துவிட்டது.

இந்தோசீனு பற்றிய ஜெனிவா மாநாட்டுக்குப் பிரிட்டனும் சோவியத் யூனியனும்தான் முன்னர் கூட்டுத் தலைமை வகித்து வந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

### தொடர்ந்து சண்டை

கம்போடியாவில் எஞ்சியிருக்கும்கம்யூனிஸ்ட் ராணுவ முகாம்களையும்நிர்மூலமாக்கி விடுவதற்காக தென்வியட்னும் படையினர் எல்லையோரப்பகுதிகளில் புதிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஃபிஷ்ஹுக் பிரதேசத்தில் தென்வியட்னும் படையினர். இத்தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள். அமெரிக்க விமானப் படையும் பீரங்கிப்படையும் இத்தாக்குதலில் தென் வியட்னுமியருக்கு உதவியாக விருந்து வருகின்றன.

கம்போடியாவுக்குள் புகுந்துள்ள அமெரிக்கப்படைகள் வெளியேறிய பிறகும்கூட தென்வியட்னும் படையினர் அங்கு தொடர்ந்து இருந்து வருவார்கள்என்று கூறப்படுகின்றது.

## மா-சே-துங் அறிக்கை

கம்போடியாவுக்குள் அமெரிக்கத் துருப்புகள் புகுந்து தாக்குதல்களை நடத்திவருவதைக் கண்டித்து கம்யூனிஸ்ட் சீனத்தலைவர் மா-சே-துங் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

இந்தோ சீனுவிலிருந்து ஏகாதிபத்தியவாதிகளான அமெரிக்கர்களைத் துரத்தியடிப்பதற்கு ஒன்றுபடும்படி உலக மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

மக்கள் எழுச்சியுற்று ஆயுதம் தாங்கி, தமது நாட்டின் விடுதலைக்காகப் போராடாதுபோனால் வெற்றி கிடைப்பது சாத்தியமாகாது என்று தலைவர் மாவோ தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்போடியா, லாவோஸ், வியட்னும் நாடுகளில் மக்கள் நடத்திவரும் போராட்டங்களை கம்யூனிஸ்ட் சீனு உறுதியாக ஆதரிக்கின்றது என்றும்அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். தலைவர் மா-சே-துங்கின் அறிக்கை பீகிங் வானொலியில் வாசிக்கப்பட்டது.

## உதவி ஜனாதிபதி கார் மீது கல் வீசியவருக்குச் சிறை

சென்னை, மே 21

இந்திய உதவி ஜனாதிபதி பதக் கார் மீது கல் வீசியவருக்கு மூன்று மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சமீபத்தில் தமிழ் நாட்டிற்கு வந்திருந்த உதவி ஜனாதிபதி பதக் மேட்டூர் அலுமீனியத் தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டார். அப்போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்தது. கல்வீச்சு சம்பவத்தினுல் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. காரின் கண்ணுடி மாத்திரமே உடைந்தது.

கல்வீசிய அப்துல் சத்தார் ஒரு மனநோயாளி எனச் சந்தேகத்தின் பேரில் மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி பரிசோதனை செய்யப்பட்டார். இவர் மனயோயாளி அல்ல என டாக்டர் தீர்ப்பளித்தார்.

இவரின் மேல் பொலிசார் தொடர்ந்த வழக்கில் நீதிபதி இவருக்கு3 மாதகடுங்காவல் தண்டனை விதித்தார்.

## 'தமிழரசார் சமஷ்டியை என்றுமே பெறமாட்டார்கள்'

சங்கானை, வியா

தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயிக்கும் தேர்தலாக அமையப்போகும் இம்முறைத் தேர்தலை நாம் நன்கு சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்

சிங்கள மக்களின் ஒத்துழைப்பின்டு எதையும் நாம் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாது. எனவேதான் அரசியல் அனுபவம் மிக்க எமது தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி பொன்னம்பலத்தைப் பின்பற்றுகிறோம்: அவரால்தான் தமிழ் இனம்படும் இன்னல்களை தீர்க்கமுடியும்'

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு ஆ. தியாகராசா தம்மை ஆதரித்து சங்கானைப் பட்டினசபை முன்றலில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டரர். திரு அ. க. அழகசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மேலும் தியாகராசா தொடர்ந்து பேசுகையில்: சர்வகலாசாலை போன்ற பயி பிரச்னைகள் எமதுதமிழ் இனத்தை நோக்கியிருந்தும் இவைகளை தீர்த்துக் கொள்வதற்கு தமிழ் அரசுக் கட்சியினர் தடையாக இருக்கின்றனர். இனர்கள் கடந்த பதினைந்து வருடகாலம் பாராளுமன்றம் சென்று தமிழ் பேசும் இனத்திற்கு தேடிக் கொடுத்து தான் என்ன?

தமிழ் அரசார் சமஷ்டி ஒரு போதும் பெறமாட்டார்கள். எமது ஒற்றை ஆட்சிக் கொள்கையே தமிழ் மக்களின் இன்னல்களைத் தீர்க்கக் கூடியது. எமது தலைவர் திரு ஜீ ஜீ பொன்னப்பலம் பக்க வீணையாக என்னையும் தெரிவு செய்தால், நான் இங்கு நிலவிவரும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பேன்' எனக் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் சிவ ஸ்ரீதரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ் அரசுத் தலைவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடத்திற்கிடம் தமிழ் சம உரிமை பெற்றதுபற்றி வித்தியாசமான கருத்தைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கோல்பேஸ்திடலில்தனிபெண்ணுக நின்று போராடினேன்

### மாதர் மகாநாட்டில் 70 வயது மூதாட்டியின் வீரமுழக்கம்

திருக்கோணமலை, வியாழன்

"நமது மொழி, நமது உரிமைகள், சுதந்திரங்கள் பறிக்கப்பட்டால் நாம் இந்நாட்டில், தமிழர்களாக தமிழ்ப்பெண்குலமாக வாழ முடியாது. அந்நிய மொழிக்கும், இனத்துக்கும் அடங்கி ஒடுங்கி வாழவேண்டிய பரிதாப நிலை ஏற்படும். ஆகவே தமிழ்ப் பெண் குலமே, நீங்கள் ஆண்களோடு தோளோடு தோள் நின்று நமது உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடத்தயாராகுங்கள்"

திருக்கோணமலையில் திருமதி நேமிநாதன் தலைமையில் நடைபெற்ற மாதர் மகாநாட்டில் திருமதி ருக்குமணி நேசம்மாவான 70 வயது மூதாட்டியொருவர் மேற்கண்டவாறு அங்கு திரண்டிருந்த பெண்களுக்கு அழைப்புவிடுத்தார்.

திருக்கோணமலை தமிழரசு மாதர் முன்னணிக்கிளையினுல் தமிழரசு வேட்பாளர் திரு. நேமிநாதனுக்கு ஆதரவளிக்கும் முகமாக நடைபெற்ற இம்மகாநாட்டில் அந்த மூதாட்டி தொடர்ந்து பேசியதாவது:

"நான் தமிழினத்தின் சுதந்திர உரிமைகளுக்காக தமிழரசுக்கட்சியோடு சேர்ந்து போராடி இருக்கின்றேன். நான் எமது இனத்தின் விடுதலைக்காகப்பாடுபட்டேன். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னுர், நுவரேலியா, திருக்கோணமலை ஆகிய இடங்களில் 1961-ம் ஆண்டு நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களில் கலந்துகொண்டு அடி உதைபட்டேன். கொழும்பு கோல்பேஸ் திடலில் பல்லாயிரம் சிங்கள வெறியர்களுக்கு மத்தியில் தனிப் பெண்ணுக நின்று உரிமைக்குரல் கொடுத்தேன். எனது இனத்துக்காக எவ்வளவோ இன்னல் பட்டேன். இந்த தள்ளாத வயதிலும் எனது மொழிக்காக இனத்துக்காக பாடுபடவேண்டும் என்ற ஆசை என்னைவிட்டு நீங்கிய பாடில்லை. எனக்கு இந்த வயதில் இவ்வளவு வீர உணர்ச்சி இருக்கின்றதென்ருல் இளம் உள்ளங்களாகிய உங்களுக்கு எவ்வளவு வீரம் இருக்கவேண்டும்.

ஒரு பழமொழிசொல்வார்கள் ஓர் ஆண் ஒடு சுளகினுல் யானையைக்கூட மூடிவிடுவானும். அதே ஆணை ஒரு பெண் தனது சொல்லினுல் அடக்கிவிடுவாளாம். அதே தன்மையும் வீரமும்உள்ள பெண்குலமே; வீரஉணர்ச்சி கொண்டு நீங்களும் எம்மினத்தின் விடுதலைக்காகப்போராடவாருங்கள்"

சட்டக்கல்லூரி மாணவி சாந்தினி லோகிதராசா இக்கூட்டத்தில் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி திரு. பண்டாரநாயக்கா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உண்டாக்கினுர். உண்டாக்கியவர், தான்பிரதமராகவரவேண்டுமென்ற எண்ணத்தினுல், சுயநலநோக்கத்தோடு, இந்நாட்டில் 24 மணி நேரத்தில் தனிச்சிங்களத்தைத் திணிப்பேன் தமிழர்களை சிங்கள மொழியை படிக்கவைப்பேன் என்று கூறினுர். அவருடைய எண்ணம் அன்று பலிக்கவில்லை. இன்றும் அது நடைபெறவில்லை. இந்நாட்டில் இரண்டுபெரும்சிங்களக் கட்சிகள் இருக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி சுயநலத்தின் அடிப்படையிலே தோன்றியது. ஐக்கிய தேசியக்கட்சி முழு வகுப்புவாதத்திற்காக தோன்றிய கட்சியாகும்.

இந்நாட்டில் தமிழர்கள் சுதந்திரமாகவும், சுயமரியாதையோடும் தன்மானத்தோடும் வாழவேண்டும் என்று நினைக்கின்ற ஒரே கட்சி தமிழரசுக்கட்சியொன்றே,

சிங்களக்கட்சிகள் தாங்கள் அரசாங்கம் அமைக்க வேண்டுமென்ற பேராசையினுல் தமிழரசுக்கட்சியிடம் நீங்கள் கேட்டதைத் தருகின்றோம் எனக்கூறி ஆதரவுபெறுகின்ருர்கள். பின் ஏமாற்றுகின்ருர்கள். கொடுத்த வாக்குறுதிகளைத் தர மறுக்கின்றபோதெல்லாம் தமிழரசுக்கட்சியினர் சேர்ந்தகட்சியிலிருந்துவிலகி தமது சுயமரியாதையைக் காப்பாற்றி வந்திருக்கின்ருர்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து நீங்கள் என்ன சாதித்தீர்கள் என்று கேட்பது அறிவீனம்:

தமிழர்கள் சிங்களம் படிக்க வேண்டும்; சிங்களவர் தமிழைப் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் நமது உரிமைகள் நிலைநாட்டப்படுமென்று திரு ஜி ஜி பொன்னம்பலம் கூறுகிருர். இது நடக்கக்கூடிய காரியமா? நாம் இதற்குத் தயாரென்ருலும் சிங்கள மக்கள் தயாராகுவார்களா? என்று ஏன் அவர் எண்ணிப் பார்க்க மறந்துவிட்டார்.

பிரதமர் டட்லி சேனநாநாயகா அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயஞ் செய்தபோது முஸ்லீம் பெருமக்களைப் பார்த்து, தமிழ் மக்களை இந்நாட்டிலிருந்து அழித்துவிட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் மக்களாகிய உங்களை அடுத்தபடி அழித்துவிடுமெனக் கூறினுர். அவர் கூறியதைப் போல இந்நாட்டை விட்டு. நம் தமிழினத்தை அழிப்பதற்கு இவ்விரு சிங்களக் கட்சிகளும் இன்று முயன்று வருகின்றன. இந்நாட்டைச் சிங்கள நாடாக்கி, இந்நாட்டிலிருந்து தமிழரை விரட்டவேண்டுமென்ற சட்டத்தைப் பாராளுமன்றத்திலே சிங்களக் கட்சிகள் கொண்டுவந்தால் இவ்விரு சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகளாகப் போட்டியிடும் தமிழர்களும் கையுயர்த்தி நம் அழிவுக்கு வழிவகுப்பார்களென்பதைத் தமிழர்கள் உணரவேண்டும்" எனக் கூறினுர்.

மற்றும் செல்வி யோகேஸ்வரி, திரேசா தம்பிப்பிள்ளை, செல்வி திலகம் நடராசா, செல்வி சுப்பிரமணியம் மகாராணி, திருமதி பிலோமினு லோறன்ஸ் ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

0 0 0

### மகாராஷ்டிரத்தில் நடந்த

# இனக்கலவரங்களுக்கு சிவ சேனைதான் காரணம்

## லோகசபையில் சவான் அறிவிப்பு

புதுடில்லி, மே. 20

மகாராஷ்டிரத்தில் அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரங்களுக்கு சிவசேனை இயக்கத்தைச் சேர்ந்த ... பெயரைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று திரு சவான் குறிப்பிட்டார்.

இந்தக்கலவரங்களில் ஈடுபட்டவர்கள் பிற்போக்கு ...

## தீவிபத்தில் 14 பேர் பலி

ராவல்பிண்டி, மே 20

பாகிஸ்தானில் லாகூர் நகரில் நேற்றுப் பகல் வெடிமருந்துகள், தோட்டாக்கள், குண்டுகள் முதலியவை சேகரித்து வைக்கப் ...

# தேர்தல் போட்டி-1970

# 'பரஸ்பர இன ஒற்றுமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவான் அறிவிப்பு

புதுடில்லி, மே. 20

மகாராஷ்டிரத்தில் அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரங்களுக்கு சிவசேனை இயக்கத்தைச் சேர்ந்த ஆட்கள்தான் காரணம் என்று இந்திய உள்துறை அமைச்சர் திரு. சவான் கூறியிருக்கிறார்.

கலகம் பாதித்த பகுதிகள் இப்பொழுது மீண்டும் சகஜ நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. வீடுவாசல்களை விட்டு வெளியூர்களுக்கு ஓடிவிட்ட பெரும்பாலான மக்கள் மீண்டும் திரும்பிவந்து கொண்டிருக்கிறார்கள். நிவாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கொள்ளையடிக் கப்பட்ட பொருட்களை மீட்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

மகாராஷ்டிரத்தில் ஏற்பட்ட கலவரங்கள் சம்பந்தமான லோக்சபை விவாதத்தை நேற்று உள்துறை அமைச்சர் முடித்துவைத்துப்பேசினார்.

பிவாண்டியிலும், பெல்காமிலும் இடம்பெற்ற கலவரங்களுக்கு சிவசேனை ஆட்கள் தான் காரணமாய் இருந்திருக்கிறார்கள். என்பது என்கருத்து இவர்கள் மகாராஷ்டிரத்துக்கு அவப்பெயரைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று திரு சவான் குறிப்பிட்டார்.

இந்தக்கலவரங்களில் ஈடுபட்டவர்கள் பிற்போக்கு மனப்பான்மை கொண்டவர்கள், சிவசேனைக் காரர்களையும்மகாராஷ்டிரமக்களையும் ஒன்றாக எண்ணுதீர்கள் என்று சவான் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலைமையை இவ்வாறே விட்டுவைக்கமுடியாது. தீவிரமான சட்டநடவடிக்கைகள் மூலமே இதனை அடக்கவேண்டும் என்று குறிப்பிட்ட திருசவான், இப்பொழுது வகுப்புத்தொல்லைகள் அதிகரித்திருக்கின்றனவென்றும், சிறுபான்மையோர் நம்பகமானவர்கள் அல்லவென்றமுறையில் கருத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன வென்றும் குறிப்பிட்ட அவர், பிரதமமந்திரி குறிப்பிட்டதுபோல் எல்லாசத்திகளையும் ஒருங்கிணைத்து வகுப்புவாதத்தை எதிர்க்கவேண்டும் என்றார்.

பிரதமமந்திரி நிகழ்த்திய சொற்பொழிவுசிறுபான்மை மக்கள் மத்தியில் புதுநம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றது என்று பல அங்கத்தவர்கள் சபையில் தெரிவித்தார்கள்.

## ஐ.நா.வில் மகாராஷ்டிர கலவரம் பிரஸ்தாபம்

### பாகிஸ்தான் கிளப்பியது

மகாராஷ்டிரத்தில் இனக் கலவரங்கள் நடைபெற்றிருப்பதுசம்பந்தமாக பாகிஸ்தான் ஐ. நா. சபையில் பிரச்னைகிளப்பியது, ஐ. நா. பொருளாதார சமூக விவகாரங்கள் சம்பந்தமாக சபையில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்கள்பற்றி பாகிஸ்தான் குறிப்பிட்டது. இந்தியாவில் இனக்கலவரங்களை. நிறுத்துவதற்கு ஐ. நா, சபை தலையிடவேண்டும் என்று பாகிஸ்தான் கேட்டுக்கொண்டது.

இந்தச்சபையில் இந்தியப் பிரதிநிதிகருத்துத் தெரிவிக்கையில் எங்கள் உள்நாட்டு விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு வெளியார் தலையீடுதேவையில்லை யென்றார், ''எங்கள் வீட்டை ஒழுங்காகவைத்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும்'' என்றார் திரு. ஜா.

பாகிஸ்தானில் சிறுபான்மையோர் சம்பந்தமாக சிறு சிறு சம்பவங்கள் இடம் பெறுவதைப்போலவே இந்தியாவிலும் சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறிய அவர், பாகிஸ்தானிலிருந்து ஆயிரக் கணக்கான சிறுபான்மை மக்கள் தினமும் இந்தியாவுக்குள் வந்து குவிந்து கொண்டிருககிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

—

### வாக்குப் பத்திரங்கள் அனுப்பப்பட்டன

முசலி புதன்

''மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியருக்கான தபால் வாக்களிப்புப் பத்திரங்கள் மன்னார் தேர்தல் அதிகாரியால் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்புக்கு வேண்டிய எல்லா அலுவல்களையும், மன்னார் உதவ தேர்தல் அதிகாரி திரு. கேலோகேஸ்வரன் கவனித்து வருகின்றார்.

ராவல்பிண்டி, மே 20

பாகிஸ்தானில் லாகூர் நகரில் நேற்றுப் பகல் வெடிமருந்துகள், தோட்டாக்கள், குண்டுகள் முதலியவை சேகரித்து வைக்கப் பட்டிருந்த குதம் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக 14 பேர் பலியானார்கள். 14 பேர் காயமடைந்தார்கள். இவர்களில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர். குண்டுகள் வெடித்தபோது பக்கத்திலிருந்த பல வீடுகளும் சேதமுற்றன.

### தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

புத்தூர், வியாழன்

பஸ்-கார் விபத்தொன்றில் புதுமணத்தம்பதிகள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர் மேற்படி சம்பவம் திருநெல்வேலி சந்தியில் நடைபெற்றது.

திருநெல்வேலியிலுள்ள மணமகன் வீட்டிலிருந்து சாவகச்சேரியிலுள்ள மணமகள் வீட்டிற்குப்போகும் பொழுது திருநெல்வேலி சந்தியைக் கடக்கும் சமயம் கோண்டாவிலில் இருந்து வந்துகொண்டிருந்த கடுகதி பஸ்வண்டியுடன் மோதியதால் காரின் ஒருபக்கம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. ஆனால் காருக்குள் இருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தப்பினர்.

—

### ஆசிரிய நல்லுறவு மன்றம்

உடுவில் புதன்

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய ஆசிரிய நல்லுறவு மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. டபிள்யூ. ஞானசிகாமணி அன்னப்பா தலைமையில் நடைபெற்றது. கனிஷ்டபிரிவு அதிபர் திரு. எஸ், எஸ். ஐயர் மன்றத்தின் சேவையையும் நட்புறவையும் பாராட்டி பேசினார். ஒவ்வொரு பாடசாலைகளிலும் இவ்வகை மன்றங்கள் தோன்றி ஆசிரியர்களின் நலனையும் நட்பையும் பாதுகாக்க வேண்டும் என அவர் தமது பேச்சில் வலியுறுத்திக் கூறினார். புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவில் தலைவராக திரு. டபிள்யூ. ஞானசிகாமணி அன்னப்பாவும், செயலாளராக திரு. வி. ஐயாத்துரையும், தனாதிகாரியாக திருமதி எஸ். ஆர். சேனாதிராசாவும், கணக்காய்வாளராக திரு. வி. பரிபூரணானந்தசர்மாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி - 1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள கமாஜனக் கட்சி, இ: கதி,. க.மு கட்சி என்பன.

பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்
'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

### 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''
### 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் : ........................................

விலாசம் : ........................................

........................................

மொழிக்காக இனத்துக்காக பாடுபடவேண்டும் என்ற ஆசை என்னைவிட்டு நீங்கிய டம் நீங்கள் கேட்டதைத் தருகின்றோம் எனக்கூறி ஆதரவுபெறுகின்றார்கள். லோறன்ஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

0 0 0

## 'பரஸ்பர இன ஒற்றுமைக்கு தமிழர் சிங்களம் படிக்கலாம்'

### இளவாலையில் கெனமன் விளக்கம்

மாவிட்டபுரம் வியா

''இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் யாவரையும் நான் சிங்களவனுக்குவேன் எனக் கூறப்படும் வதந்திமுழுத்தவறானது. இனத்தைமாற்ற நான் ஆண்டவனா? ஒரு இனத்தில் இருப்பவனை எப்படி மறு இனத்துக்கு மாற்றமுடியும்? எனக்கு அந்த ஆற்றல் உண்டா? ஆனால் நாட்டில் உள்ள பல இனமக்களின் மத்தியில் நல்லுறவு பரஸ்பர உறவு ஆகியனவற்றை வளர்கக உழைப்பேன் தமிழர் சுபீட்சமாக இதனால் தான் வழ முடியும்.''

இவ்வாறு காங்கேசன் துறையில் கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு, வி, பொன்னம்பலத்தை ஆதரித்து இளவாலை வடக்கில் நடந்தபிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் திரு. பீற்றர் கெனமன் கூறினார்.

திரு. கே. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

காங்கேசன் துறையில் தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவருக்கு எதிராக கடும் போட்டியை எமது வேட்பாளர் ஏற்படுத்தியுள்ளார். செல்வநாயகம்எனது தந்தையின் நண்பர். எனது சகோதரர்களுக்கு ஆசிரியராக இருந்தார். பாராளுமன்றத்தில் 10 வருடங்களாக நானும் அவரும் சகபாடிகள், அவர்மேல்எனக்கு நல்ல மதிப்பு உண்டு. ஆனால் தமிழ் மக்களை பாரதூரமான பாதையில் இட்டு சென்றுவிட்டார். ஆகவே தமிழருக்கு புதிய பாதை புதிய தலைமை வேண்டும். அதற்குதகுந்தவர் திரு. வி. பொன்னம்பலம்தான்.

#### தென்னிலங்கையில் பெரும் போட்டி

தென்னிலங்கையில் பிரமாண்டமான அரசியல் போட்டிநடக்கிறது. எம்மைப் பொறுத்தவரையில் நாட்டை நல்ல முறையில் நடத்தி நாட்டின் சுபீட்சமான சமதர்ம வாழ்வைஏற்படுத்தவேண்டும் எனவிரும்புகிறோம். ஆனால் யு. என். பி, முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஆதரவு கொடுத்து சுரண்டல் ஆதிக்கத்துக்கு வழி கோலுகிறது.

அங்கு நடக்கும் தேர்தல் போட்டியில் கூட்டணி கட்டாயம் வெற்றிபெறும். இந்நிலையில் தமிழ் மக்கள்எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்து எமது கட்சி வேட்பாளரை ஆதரிக்கவே வந்தேன். என்போன்ற கூட்டணி பிரமுகர்கள் இங்கு வருவதையிட்டு பொய் பிரசாரம் நடக்கிறது. நாம் தமிழரசுகட்சியுடன் ஒப்பந்தம் செய்து அவர்களின் ஆதரவை பெறுவாதாக தெரிவிக்கப்படுகிறது, நான் இங்குவந்து ஒரு தமிழரசு தலைவரையாவது சந்திக்கவும்இல்லை. ஒப்பந்தம் செய்யவுமில்லை.

வடக்கில் 3 மார்க்கங்கள் வழிகாட்டியாக இருக்கின்றன ஒன்றுயு என் பி. காங்கிரஸ் மற்றது தமிழரசு, மற்றதுதமிழ் சிங்கள மக்களிடையே புதிய அத்திவாரத்தை ஏற்படுத்தும் ஐக்கிய முன்னணி. இதை மக்கள் சிந்தித்து நல்லமார்



(4ம் பக்கம் பார்க்க)

## 'இனக்கலவரக்காரர்கள் தேசிய அரசில் இருக்கின்றனர்'

புத்தூர், வியாழன்

''சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு நாட்டில் 58ல் நடைபெற்றது போல் இனக்கலவரங்களும் தோன்றும் என்று சில முதலாளித்துவக் கட்சிகளான பிற்போக்கு சக்திகள் மேடைகளில் உளறுகின்றன. ஆனால் பொதுமக்களாகிய நீங்கள் சற்று சிந்திக்கவேண்டும். இனக்கலவரத்துக்குக் காரணமாக இருந்த தலைவர்கள் இப்பொழுது தேசிய அரசாங்கத்திலேயே அங்கம் வகிக்கின்றனர் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.''

இவ்வாறு அச்சுவேலியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. எம். துரைராசாவை ஆதரித்து திரு. என். பொன்னுக்கோன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கொழும்பு மத்திய தொகுதி கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் திரு. பீட்டர்கெனமன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

சோஷலிச ஐக்கியமுன்னணி வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் போட்டியிடுவது சிங்களவரும் தமிழரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து பரஸ்பர நம்பிக்கையுடன் வாழவேண்டுமென்பதற்காகவே தமிழ்க்காங்கிரசும் தமிழரசுக்கட்சியும் சேர்ந்துதான் 2 கொத்து அரிசியை ஒரு கொத்தாக்கி ஏழைமக்களின் வயிற்றில் அடித்தது. எப்பொழுதாவது தமிழரசுக்கட்சி உடுபிடவை, சாப்பாடு, உத்தியோகம் இவைகள் பற்றிக் கேட்கின்றனவா? இன்று 17 ஆயிரம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கின்றனர். இதில் 3 ஆயிரம் பேர் தமிழர்கள். இந்தக் காலங்களில் தமிழரசுக்கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வசித்திருக்கின்றன. 112 சதவீதமாக இருந்த வாழ்க்கைச்செலவு தற்பொழுது 138 ஆகக் கூடியுள்ளது. எனவே வேலையில்லாப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு ஆகியவைகளுக்கு தீர்வுகாண்பதாகக்கூறிய பிரதமர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. என்றார்.

கோப்பாய் தொகுதி சிறிலங்கா வேட்பாளர் திரு. எம். துரைராசா, கே. தவஞானம், எம். சி. சுப்பிரமணியம் ஆகியோருட்பட மற்றும்பலர் பேசினர்.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 389,

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 8-ந் திகதி (22-5-70)


## ஒரு நல்ல அறிகுறி

**ஸ்ரீலங்கா** சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கிய தலைவரான திரு. இலங்கரத்ன, தேர்தலிலே தமிழன் ஆதரவைப் பெற யாழ்ப்பாணத்துக்கு வந்து பேசியிருக்கின்றார். இது வரவேற்கத்தக்கதாகும் அக்கட்சியின் தலைவரான திருமதி ஸ்ரீமாவோ இங்கு வரலாமென்று கூறப்பட்டது. அவர்வந்திருந்தால்பெரிதும் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். எக்காரணம் பற்றி அவர் இங்கு வர முடியாமற்போயிருப்பினும் சரி சென்ற 1956,ம் வருடத்திலிருந்து அக் கட்சியைச் சேர்ந்த பிரதமர்களோ அல்லது முக்கிய தலைவர்களோ வடபகுதிக்கு வராமலேயே அல்லது வர முடியாமலே இருந்த நிலை மாறி, இப்போது அவர்கள் இங்கு வரவேண்டிய அவசியத்தை உணர்ந்துவந்தது நாட்டின் அரசியலில் நல்லதோர் அறிகுறி என்றே கருதவேண்டும்.

அந்நியர் நமக்கு அளித்துள்ள இந்த ''ஜனநாயக'' அரசியல் அமைப்பு பெரும்பான்மையோரின் ஆட்சியாகவே இருப்பதாலும், சிங்கள சமூகத்தவரே இந் நாட்டில் நிரந்தரமான பெரும்பான்மை சமூகமாக இருத்தலாலும், தமிழரின் உதவியோ ஒத்துழைப்போ இன்றி தாங்கள் இங்கு ஆட்சிநடத்தலாமென்றும், இதற்கானமுறையில் சட்ட திட்டங்களைச் செய்தால் போதும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் மட்டுமன்றி ஐக்கியதேசியக்கட்சியினரும் எண்ணிக் காரியங்கள் செய்தனர். இதற்காக தமிழரின் மொழிஉரிமையை இரு கட்சிகளும் சேர்ந்து பறித்து தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றின. அச்சமயம் இடதுசாரிக்கட்சிகளெல்லாம் அச்சட்டத்தை எதிர்த்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரம் புதிதாகக் கிடைத்ததாலும் அரசியலில் அனுபவம் இல்லாததாலும் இவ்வித தவறுகள் செய்யப்பட்டது இயற்கையே. ஆனால் பின்னர் தமிழரும் இச் சட்டத்தை எதிர்த்து அவ்விரு கட்சிகளிலிருந்தும் விலகினர். போராட்டங்களும் களும் உணர்ந்து அதற்குப் பிராயச்சித்தம் செய்ய பல பல முயற்சிகளையும் பின்னர் செய்துவருவதைப் பார்க்கின்றோம். அந்தச் சட்டத்தை நீக்கி, முன்போல் தமிழுக்கு நாடெங்கும் சமஅந்தஸ்து இருக்கும்படியாகச் செய்யும் போதுதான், அந்த வகுப்புவாத பாவமும் நீங்கி, இங்கு அரசியல் பரிசுத்தப்பட முடியும்.

1958-ம் வருட வகுப்புக் கலவரங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சியே காரணமென்று சுதந்திரக்கட்சியும், சுதந்திரக்கட்சியே காரணமென்று ஐக்கிய தேசியக்கட்சியும் பரஸ்பரம் குற்றம்சாட்டுவதைப் பார்க்கின்றோம், ஆனால் தங்களுக்குள் வேறு என்ன வேற்றுமைகள் இருப்பினும் தமிழரின் மொழிஉரிமையைப் பறித்த குற்றத்தை, அரசியல் பாவத்தை இவ்விரு கட்சிகளும் சேர்ந்தே செய்துள்ளன வென்பதை மறுக்கமுடியாது. மறக்கவும் முடியாது, தமிழரின் நம்பிக்கையையும், உதவியையும் ஒத்துழைப்பையும் மீண்டும் பெறவேண்டுமென்று உண்மையில் இவ்விரு கட்சிகளுக்கும் ஆவல் இருப்பின் தாங்கள் ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றியமொழிச் சட்டத்தை தமிழருக்குச் செய்துவிட்ட பெரும் தீங்கை நீக்க முன்வர வேண்டும் இல்லாதவரை தமிழரின் மனப்புண் ஆறமுடியுமென்று அவர்களே எப்படி எதிர்பார்க்கமுடியும்?

தேர்தல் முடிந்தபின் புதிய பார்லிமெண்ட்சபையே அரசியல் நிர்ணய சபையாக இருந்து, இலங்கைக்குப் புதிய அரசியலை வகுக்குமென்று சுதந்திரக்கட்சியின் தேர்தல்விஞ்ஞாபனம் தெரிவிக்கின்றது ஐக்கியதேசியக் கட்சியும் அரசியலில் திருத்தப்செய்வதாகக் கூறுகின்றது. அப்பொழுது மொழி விஷயம் தீர்ந்துபோனதென்று கருதாமல், இந் நாட்டில் முக்கியமான ஒரு சமூகமாகவுள்ள தமிழர், நாடு விடுதலை பற்றகாலத்திலும் அதற்குப் பிறகும் கூட தங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழிக்குப் பெற்றிருந்த சமஅந்தஸ்தை மீண்டும் பெறக்கூடியதாகச்

# 3 வருடத்தில் மகாவலியை வடக்கே திருப்பலாம்
# அது சுலபமான வேலை என்கிறார் வி. குமாரசாமி



தமிழ்க்காங்கிரஸ் ஆரம்பகால உறுப்பினரும், உதவி நீதிமந்திரியாகவும் உதவி போக்குவரத்து மந்திரியாகவும், உதவி உணவு மந்திரியாகவும் கடமையாற்றியவர் இப்பபாது சாவகச்சேரித் தொகுதியில் தமிழ்காங்கிரஸ் வேட்பாளராகம் போட்டியிடும் திரு. வே. குமாரசாமி 1947-ம் ஆண்டு தொடக்கம் 1956-ம் ஆண்டு வரையும் சாவகச்சேரிப் பிரதிநிதியாககவுமிருந்தவர் திரு. குமாரசாமிஅடிப்படைஉரிமைகள் முன்னணி ஒன்றை அமைத்து அதன் தலைவராகவும் இருந்தவர். வழக்கறிஞரான இவர் விவசாயத்தில் அதிக ஈடுபாடுடையவர். ஐ ஆர். என்ற புதிய ரகநெல்பற்றி அதிகம் தெரிந்தவருமானவார்.

திரு. வே. குமாரசுவாமியை பேட்டி கண்பதற்காக சாவகச்சேரிக்கு சென்றேன் நேரம் இரவு 8 மணி! சாவகச்சேரியிலுள்ள சரஸ்வதி பூங்கா ஒரே கலகலப்பாக இருந்தது. வாலிபர்கள்தான் அதிகமாகக் காணப்பட்டனர். திரு. குமாரசாமி கன்வசிங்குக்கு சென்றுவிட்டதாகவும் அன்று ஒரு இடத்திலும் கூட்டமில்லாததால் 9 மணிக்கு முன் வருவார் என்றும் அறிந்துகொண்டேன்.

இரவு 9 மணிக்கு திரு. குமாரசுவாமி 'கன்வசிங்' முடித்துக் கொண்டு வந்தார் பேட்டிகாண ஈழநாட்டிலிருந்து வந்திருப்பதாககூறினேன் அமரும்படி கூறிவிட்டு. அவரை சந்திக்க வந்திருந்த அதரவாளர்களுடன் பேசினர்.

### சாதித்தது என்ன?

திரு. குமாரசாமி ஆதரவாளர்களுடன் பேசிமுடித்தபின் பேட்டிகாண என்னை வரும்படி அழைததார் முதலாவது கேள்வியாக முன்னர் நீங்கள் பிரதிநிதியாக இருந்தபோது ஆட்சிமன்றத்தில் நிங்கள் சாதித்தது என்ன? என்றுகேட்டேன் அவர் சிரித்துவிட்டு எவ்வளவோ சாதித்திருக்கிறேன் என்றார். அவர்கூறியதாவது.

எனது காலத்தில் கிளிநொச்சித் தொகுதியும் சாவகச்சேரியுடன்தான் சேர்ந்து இருந்தது. குடியேற்றத் திட்டங்கள் மூலம் கிளிநொச்சித் தொகுதியை உருவாக்கினேன். எனது தொகுதிக்கு சுமார் 40 கோடிககு மேல் வேலை செய்திருககிறேன். 30 லட்சம் ரூபா செலவில் இரணைமடு குளத்தை 6 அடி

1949-ம் ஆண்டு காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆடசிமன்றத்தில் ஓர் தீர்மானம்கொண்டுவந்தேன் அது நிறைவேற்றப்பட்டு, மந்திரிசபையும் அங்கீகரித்து அடையாளமான்யமும் ஒதுககப்பட்டது அத்திட்டத்தை தேசிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. கைதடியில் ஆயுர்வேத கல்லூரி கடடவேண்டுமென்று 1949-ம்ஆண்டு செப்டம்பர் மாத 23-ம்தேதி ஆடசிமன்றத்தில், ஒரு தீர்மானம் கொண்டுவந்தேன் அது நிறைவேற்றப்பபட்டது. அதற்காக 49-ம் ஆண்டு

**பேட்டி கண்டவர்;**
**நமது நிருபர் கா.யோகநாதன்**

உயர்த்தினேன். 25 லட்சம் ரூபா செலவில் வவனிக குளத்தில் வேலைகள் செய்தேன். அககராயன்குளம், வன்னேரிககுளம், கல்விழான்குளம், இன்னும் இம்படிப் பல குளங்களைக கட்டுவித்தேன் துணுககாய். நண்டாவலை, முள்ளியான், வரணி கைதடி, சாவகச்சேரி, வேராவில், பளை, பூநகரி ஆகிய இடங்களில் ஆஸ்பத்திரிகளை கட்டுவித்தேன். மிருசுவிலில் பிரபல ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவினேன். பெரும் முயற்சி எடுத்துக்கைதடி வயோதிபர் சாலையை நிறுவினேன் சாவகச்சேரி நீதிமன்றம், வேராவில் கிராமசங்க மண்டபம், சாவகச்சேரி கிராமசங்கமண்டபம், ஆகியவவற்றை கட்டுவித்தேன்.

மட்டுவில் அரசினர் சிரேஷ்டபாடசாலை, நாவற்குழி சிரேஷ்டபாடசாலை பூநகரி அரசினர் கனிஷ்டபாடசாலை சாவகச்சேரி கைத்தொழில் பாடசாலை சாவகச்சேரியில் இயங்கும் டெலிபோன் நிலையம் அரசினர் விற்பனைப்பகுதிக்கிளை ஆகிய

கைதடியில் காணியும் 'றிசேவ்' செய்யப்படடது. அதனையும் இன்று தேசிய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது- நாவற்குழியில் தானிய களஞ்சியம் நிலவுவதற்கு தான் திட்டங் போட்டிருந்தேன். அதுவும் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. 1955-ம் ஆண்டு மீசாலையில் புதிய புகையிரதநிலையம் நிறுவுவதற்கு மந்திரியை அழைத்து வந்து இடத்தைக் காண்பித்தேன். காணியும் ஒதுக்கப்பட்டது. அதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்றது. இன்று அத்திட்டத்தை தேசிய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரியாக இருந்தபோது கச்சாயில் உப்பளம் நிறுவுவதற்கு அவர் மூலம் தான் முயற்சி எடுத்தேன். அவர் போட்ட உப்பளத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படாவிடிலும் இதனை தேசிய அரசாங்கம் ஏற்றுள்ளது.

கே மகாவலிகங்கை வடக்கே வராது என்று

## பரஸ்பர இன ஒற்றுமை..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

க்கமான ஐக்கிய முன்னணியை ஆதரிக்கவேண்டும்.

'வேலையற்றோர் 8 லட்சமாக பெருக்கிவிட்டனர். இதில் இதில் அரைவாசி பேர் தமிழர். பட்டதாரிகள் இன்று வேலையற்று 17 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். இதப்பற்றி தமிழரசுக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவை இழந்த் உரிமை இல்லையா? வாழ்க்கைச்செலவு 138 ஆகிவிட்டது. அரிசி அரைவாசியாகிவிட்டது. மல்லி, மைசூர்பருப்புபோன்றன கூப்பனுக்கு வழங்கப்படுகின்றன. குழந்தைதளின் மா சவர்காரம் போன்றவற்றுக்கு கட்டுப்பாட்டுவிலை. இதுபற்றி தமிழரசுக்கு கவலையில்லையா?

அன்றூட உரிமைகளான இவற்றைவிட்டு எந்த உரிமையை இவர்கள் கேட்கிறார்களோ தெரியவில்லை.

பெரும்பான்மைமக்களின் மொழியை அறிந்து அவர்களுடன் பரஸ்பரஉணர்வுடன் வாழ்வது ஒருசமதர்ம வாழ்வை ஏற்படுத்தும்.

என்று தமிழரசு சிங்கள மொழியை ஏற்றது. நாகநாதனும், திருச்செல்வமும் தனிச்சிங்களத்தை ஏற்போம்என கூறியுள்ளார்கள். சட்டத்தை ஏற்றவர்கள் ஏன் தமிழர் சிங்களம் படிப்பதை எதிர்க்கிறார்கள்? தமது பிள்ளைகள் மட்டும் சிங்களம் படித்து உத்தியோகம் பெறவேண்டும் என்பதுதான் அவர் நோக்கம். நாம் கட்டாயம் சிங்களம் படிக்க வேண்டுமென்று கூறவில்லை. சமூகங்களுக்கிடையே பரஸ்பரஒற்றுமை

## நைலோன்...

# ஜெயரான் எழுதுவது..

இருபத்திரண்டு வருடங்களுக்குப் பின், திருவாரூர் தியாகராஜசுவாமியின் தேர் சென்ற ஞாயிறன்று வெற்றிகரமாக, பக்திச் சூழ்நிலையில் ஓடியுள்ளது. தி. மு. க. ஆட்சியிலே இந்தத் தேர் மீண்டும் ஓடியதைப் பற்றித் தாம் பெருமை கொள்வதாக அமைச்சர் சுப்பையா கூறி, ஒரு தேங்காயை உடைத்துத் தேர் ஓட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். 'தியாகேசா', 'ஹரஹர மகாதேவா' என்ற பக்திக் கோஷங்கள் எழுந்தன. சுமார் இலட்சம் பேர் கூடியிருந்து தரிசித்தார்களாம்.

'திருவாரூர் பிறந்தார்கள் அடியார்க்குமடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடி, இறைவனின் பூரண அருள்பெற்ற இந்தப் புண்ணிய ஸ்தலத்தின் பெருமையை விளக்கத் தேவையில்லை. பிரமாண்டமான கோயில். ஐந்து வேலி, அதாவது சுமார் 30 ஏக்கர் விஸ்தீரணம். கமலாலயம் என்ற அழகான திருக்குளமும் அதே பரப்புள்ளது!

0 0 0

இத்தேரை இழுக்க முன்னர் இருபதினாயிரம் பேர் வேண்டுமாம். ஜனத்தொகை பல மடங்கு உயர்ந்திருப்பினும், தேர் இழுக்க அவ்வளவு பேர் கிடைக்காததால்தான் இவ்வளவு காலமாக அது ஓடவில்லையாம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தியாகராஜ முதலியார்தான் இக் கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தா. இரு கட்சியினரும் இத்திருப்பணியில் ஒத்துழைத்துள்ளது ஒரு நல்ல அறிகுறி.

மரத்தால் இருந்த தேரின் சக்கரங்களையும், அச்சுகளையும் உருக்காக மாற்றியுள்ளதால் தேரின் கனம் முன்னைவிட அதிகரித்துள்ளது என்றாலும் பின்னாலிருந்து 'உலுக்கு மரம்' போடுவதற்குப் பதில் டிராக்டர் மெஷின் வைத்திருப்பதுடன், விசையாலேயே சறுக்குக்கட்டையும் அமைத்துள்ளனராம் இந்திய எஞ்சினியர்கள். இதனால் இத்தேரை இழுக்க இப்போது 2,500 பேர் போதுமானதாக உள்ளதாகவும் செய்தி தெரிவிக்கின்றது.

இருக்கமுடியாது: இதற்கு ஏதோ முக்கிய காரணம் இருக்கத்தான்வேண்டும்:

தெய்வத்தின் பெயரால் ஊர்மக்களை எல்லாம் சாதி முதலிய வேற்றுமைகளின்றி ஒற்றுமைப்படுத்திஇழுக்கும் நோக்கத்துடனேயே இவ்வளவு பெரிய தேர் அமைத்திருக்கவேண்டும். ஆனால் இந்த அடிப்படை நோக்கத்தை மறந்து, தேரை, மெஷின்களையும் டீசல் இஞ்சின்களையும்கொண்டு இரண்டொரு ஆட்களைக்கொண்டு இனித் தேர் ஓட்டக்கூடிய காலமும் வருமோ என்று தோன்றுகிறது!

ஊரிலேயும் நமக்குள்ளும் ஒற்றுமைப்படுத்த தெய்வத்தின் பெயராலன்றி வேறெப்படி முடியும்? ஆனால் இந்த விஷயம் நமக்குப் புரிய எவ்வளவு அடிபடவேண்டியுள்ளது!

0 0 0

செல்வி கிருஷ்சாந்தியின் அழகான பரத நாட்டிய அரங்கேற்றம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலே நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடைபெற்றது. மண்டபம் தாங்காமல் கூட்டம்: மானிப்பாய் மகளிர் கல்லூரியில் படிக்கும் இச் செல்வியின் கலைத்திறனை இக்கல்லூரி அதிபரே பெரிதும் பாராட்டி வாழ்த்தினார்: கட்டிடக்கலைஞரும். சினிமாப் படத் தயாரிப்பாளருமான திரு. வி. எஸ். துரைராசா செல்வி கிருஷ்சாந்தியின் நடனத்தைப் பாராட்டி, அவரது கலையை வளர்க்க, வசதியுள்ளவர்கள் பண உதவிகள் செய்ய வேண்டுமென்று கூறியது வீண்போகமுடியாது.

நல்ல கலைத்திறன் பூர்வ ஜன்ம புண்ணியவசத்தால் தான்கிடைக்கமுடியுமென்பர் அப்பேர்ப்பட்ட திறமைவாய்ந்த கிருஷ்சாந்திக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதையும், அவரால் ஈழத்தின் புகழும் ஓங்குமென்பதையும் உணர்ந்தேன்.

கலையரசு சொர்ணலிங்கத்தார் ஆசி கூறுகையில் அவருக்கு 'நடன கலாஜோதி' என்ற பட்டத்தைக் கரகோஷத்திற்கிடையே அளித்தது குறிப்பிடத்தக்கது. மூன்று சங்கீதபூஷணங்கள் பின்னணி இசையில் கலந்து கொண்டதை அன்றுதான் பார்த்தேன். கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் இல்லாததாலும் இவ்விதத் தவறுகள் செய்யப்பட்டது இயற்கையே. ஆனால் பின்னர் தமிழரும் இச்சட்டத்தை எதிர்த்து அவ்விரு கட்சிகளிலிருந்தும் விலகினர். போராட்டங்களும் வகுப்புக்கலவரங்களும் நடந்தன, பிரதமராக இருந்த பண்டாரநாயகாவும் நிம்மதியாக ஆட்சிநடத்த முடியாமலில்லை. பின்னர் அவரே தமது வகுப்பைச் சேர்ந்தவரால் கொல்லப்பட்டார். அரசியல் அரங்கில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஸ்திரமான ஆட்சி நடத்த முடியவில்லை, தமிழரின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல், இங்கு யாரும் வெற்றிகரமாக ஆட்சி நடத்தமுடியாதென்ற பாடம் உணர்த்தப்பட்டது. மொழிச் சட்டத்தில் கைவைத்த அரசியல்பாவத்தின்பயனை, அதற்குக் காரணமான இரு கட்சி சமூகமாகவுள்ள தமிழர், நாடு விடுதலை பற்றகாலத்திலும் அதற்குப் பிறகும் கூட தங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழிக்குப் பெற்றிருந்த சம அந்தஸ்தை மீண்டும் பெறக்கூடியதாகச் செய்ய அவ்விரு கட்சிகளும் தயாராக இருந்தாலே, இழந்த தமிழரின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் அவர்கள் மீண்டும் பெறமுடிவதாக இருக்கும். தங்கள் மொழிக்கு இருந்த சமஅந்தஸ்து நீக்கப்பட்டுவிட்டதும் தமிழர் இங்கு சுயமரியாதையுடன் சரிநிகர் சமானமான பிரஜைகளாக வாழமுடியவில்லை என்று மனம்புழுங்கி வருவதை சுதந்திரக்கட்சி மட்டுமன்றி ஐக்கியதேசியக்கட்சியும் உணர்ந்து இந்த அநீதியை கூடிய சீக்கிரம் நீக்க முன்வருமா?

## கோவிலில் கலவரம்

தலைநகரானகொழும்பிலே ஓர் இந்துக் கோவிலில் நிர்வாகிகள் தேர்தல் நடந்தபோது கலவரம் ஏற்பட்டு, பொலிசார் வந்து அமைதி ஏற்படுத்த நேரிட்டதென்றும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இந்த அவல நிலையைப் பற்றி இந்து சமூகம் பெருமைகொள்ள முடியாது.

தலைநகரிலே உள்ள மற்ற சமூகத்தவரும் சமயத்தினரும் அங்குள்ள இந்துக்களைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் என்ன நினைப்பர்.

கோவில் கட்டி வழிபாடு செய்வதன் முக்கிய நோக்கமென்ன? தெய்வ நம்பிக்கையை வளர்த்து தெய்வம் காட்டிய வழியில் நடந்து, மனிதன், மன மாசுகள் நீங்கி முடிவில் தெய்வமாகவேண்டுமென்பதற்காகவே. ஆனால் அரசியலில் கட்சி போட்டா போட்டிகள் ஏற்பட்டு, தேர்தல் ஜுரம் அதிகரித்துவரும் சமயத்தில் இந்த ஜுரம் கோவில் நிர்வாகிகள் தேர்தல் விஷயத்திலும் பரவியதில் வியப்பில்லை. என்றாலும் ஆலய நிர்வாகத்தின் நோக்கமே முற்றிலும் வேறு. அடியார்க்கடியனாக இருந்து தொண்டு செய்வதே நிர்வாகிகள் கடமை. பதவிப் போட்டிகளுக்கு சிறிதும் இடமிருக்கப்படாது. இதை எப்படிச் செய்வது?

அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற திடமான நம்பிக்கையுள்ளவர்களே, கோவில் நிர்வாகிகளாகத் தகுதியுள்ளவர்கள். தகுதியானவர்களின் பெயர்களை ஓலைகளில் எழுதி, கோவிலில் வீற்றிருக்கும் மூலஸ்தானத்தின் திருமுன், குட ஓலைமுறையில், பெயர்களை திருவுளச் சீட்டின்படி எடுத்து அவர்களைக்கொண்டே நிர்வாகத்தை நடத்தச் செய்யின் இந்த மண்டையிடிகளெல்லாம் மறைந்து கோவில் நிர்வாகம் தெய்வத்தின் சித்தப்படி நடக்க முடிவதாக இருக்கும். அரசியலிலேயே தேர்தல் போட்டி முறையை மாற்றி, திருவுளச்சீட்டு முறையைப் புகுந்தவேண்டுமென்று திரு ஜயப்பிரகாஷ் நாராயணன் போன்ற தலைவர்கள் கூறுகையில், கோவில் நிர்வாக விஷயத்தில் இது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை, தெய்வ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, கோவில் காரியங்களை நடத்தினாலே, கோவில் வைத்து வழிபடுவதின் நோக்கம் உண்மையில் கைகூட வழிபிறக்கும்.

0 0 0

## தமிழரசார் ...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றனர். இவர்களின்பேச்சு இனியும் நிலைநிற்காது. பொதுமக்கள் அவர்களுக்கு இத் தேர்தலில் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்.

எஸ் இராஜா, சி என். தேவராசா, சுந்தரமூர்த்தி, எஸ் சிவஞானம் உட்பட பலர் இக்கூட்டத்தில் பேசினர்.

மா சவர்காரம் போன்றவற்றுக்கு கட்டுப்பாட்டு விலை. இதுபற்றி தமிழரசாருக்கு கவலையில்லையா?

## நைலோன்...

(1ம் பககத் தொடர்ச்சி)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் இராஜேஸ்வரன் கான்ஸ்ரபிள் இரத்தினம், தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இத்திருட்டுகள் சம்பந்தமாக இருவாலிபர்களை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

இதுபோன்ற திருட்டு சம்பவங்கள் முன்னரும் யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு போதிய சாட்சியங்கள் இல்லாததால் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் படித்த வாலிபர்கள் திருட்டு சம்பவங்களில் ஒரு குழுவாகவே இயங்கிவருவாகவும் இக்குழுவின் தலைவர் மிகவும் புத்திசாலித்தனமாக இயங்கிவருவதாகவும் இவர் திருட்டு சாமான்கள் எதனையும் தொடுவதில்லையென்றும் பொலிஸார் நம்புகின்றனர். குழுத்தலைவருக்கே திருட்டு சமான்களில் கூடியபங்கு கிடைப்பதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கௌரவமான குடும்பத்தைச்சேர்ந்தமலேயன் பென்சனியர் ஒருவரின் மகனும் இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிசார் கருதுகின்றனர்,

பாடசாலைசெல்லும் மாணவர்களும் இத்திருட்டு வேலைகளில் ஈடுபட்டுவருவதாகவும் இவர்கள் பகலில் மணிக்கூடு, சேலை, சேட். பேனைகள் ஆகியவற்றை திருடி குறைந்தவிலைக்கு விற்றுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்,

கந்தையா ராஜசேகரம் என்ற 18 வயது வாலிபர் 66-ம் ஆண்டு தச்சன்தோப்பில் ஒரு கோவிலில் திருடி 4 வருடம் நன்னடத்தை பாடசாலைக்கு அனுப்பப்பட்டபின்னர், அவ்வாலிபர் மீண்டும் 12கோவிலில் திருடியிருப்பதாக சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டதாக பெலிசார் தெரிவித்தனர்.

வேலையற்ற வாலிபர்களின் பிரச்னை ஒரு பொருளாதாரப் பிரச்னையென்றும் எதிர்காலத்தில் இது பெரிய பிரச்னையாகிவிடுமெனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

சிங்களம் படித்து உத்தியோகம் பெறவேண்டும் என்பதுதான் அவர் நோக்கம். நாம் கட்டாயம் சிங்களம்படிக்கவேண்டும்என்று கூறவில்லை. 'சமூகங்களுக்கிடையே பரஸ்பரஒற்றுமை ஏற்படவிரும்பினுல் தமிழர் சிங்களம் படிக்கலாம் என்பதுதான் எம் கொள்கை.

## கே. எம் பி சி பி டி யே காரணம்

1958ல் நடந்த இனக் கலவரங்களை மறந்துவிட்டார்கள். இனக்கலவரத்தை ஏற்படுத்தியவர்கள் இடதுசாரிகளேதான்என தமிழரசார் கூறினுர்கள் ஆனல் இடதுசாரிகள் ஒன்றும் செய்யவில்லை இனகலவரத்தை ஏற்படுத்தியவர்கள் கே எம் பி ராஜரத்தினு சி பி டி சில்வா போன்றவர்களுடன் தான் இன்று தமிழரசு சேர்ந்திருந்தது

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டி யாத்திரை செய்து அவ் ஒப்பந்தத்தை கிழிக்க காரணமாய் இருந்த ஜே ஆர் ஜெயவர்த்தனவுடன் ஆட்சி மன்றத்தில் இருந்து தமிழரசு.

சோசலிச சமுதாயம் ஏற்பட்டால்தான் இந்நாட்டில் உரிமைபெற்று நாம் சிறப்பாக வாழலாம் எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே கூறப்பட்டுள்ள கோரிக்கைகளை கட்டாயம் நிறைவேற்றுவோம்

நாம் ஆட்சி மன்றத்துக்கு வாந்தால் தனிச்சிங்கள சட்டத்திற்கும், தமிழ் மொழி விசேட விதிகளுக்கும் இடமளிப்போம். அதைநாம் விலக்கமாடடோம். நாம் அச் சட்டங்களை விரோதம் இல்லாதவகையில் அமுல்நடத்துவோம்.

## மூன்றுஇடத்திலும் பல்கலைக்கழகம்

வடகில் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், திருமலையில் பல்கலைக்கழகம் வேண்டும்என்றும் இரு தமிழ் கட்சிகளும் போட்டா போட்டி போட்டன. இதன் பலன் ஒருபல்கலைக்கழகமும் இல்லாமல் போனது. நாம்ஆட்சிக்கு வந்தால் வடக்கு கிழககு தெற்கு ஆகிய மாகாணங்களில் பல்கலைக கழகம் தேவையான இடத்தில்தான் நிறுவுவோம்.

திரு. எஸ் ராசா மாதகல் செல்வா வி, பொன்னம்பலம் உட்படப் பலர் பேசினர்.

சிரேஷ்டபாடசாலை பூநகரி அரசினர் கனிஷ்டபாடசாலை சாவகச்சேரி கைத்தொழில் பாடசாலை சாவகச்சேரியில் தானுக இயங்கும் டெலிபோன் நிலையம் அரசினர் விற்பனைப்பகுதிக்கிளை ஆகியவற்றை கட்டுவித்தேன்.

## வடக்கில் முதல் மகளிர் கல்லூரி

வடமாகாணத்தில் முதன் முதலாக பெண்பிள்ளைகளுக்கு, சாவகச்சேரியில் அரசாங்க மகளிர் உயர்தர கல்லூரி ஒன்றை நிறுவினேன். சாவகச்சேரி விளைபொருள் சங்கமண்டபம், பூநகரி விளைபொருள் சங்கமண்டபம், துணுகாய் விளைபொருள் சங்கமண்டபம், பரந்தன் விளைபொருள் சங்க மண்டபம், கிளிநொச்சி விவசாய பாடசாலை, சாவகச்சேரி அரசினர் மரககாலை சங்கத்தானை புகையிரத நிலையம் தச்சன்தோப்பு புகையிரத நிலையம், ஆகியவற்றை கட்டுவித்தேன்.

எனது காலத்தில் ஏராளம் ரோட்டுக்கள் போட்டிருக்கின்றேன், சாவகச்சேரி மந்துவில் டச்சுரோட்டு, எழுதுமட்டுவாள் நாகர்கோவில் ரோட்டு. மிருசுவில் வடக்கு ரூட் சாவகச்சேரி-கச்சாய் ரோட்டு, வல்லவராயன் கட்டு ரோட்டு, தச்சன் தோப்பு ரோட்டு, பரந்தன் பூநகரி ரோட்டு பூநகரி மன்னார் ரோடடு, ஆகியவைசில.

15க்கு அதிகமான உபதபாற்கந்தோர்கள் நிறுவினேன். பல தபாற்கந்தோரை உயர்ந்ததரத்திற்கு உயர்த்தினேன் பல கிராமச்சங்க ரோடடுகளுக்கு மான்யம் கிடைக்கவழிசெய்தேன் பூநகரி துணுக்காய், வரணி தபாற்கந்தோர்களில் தந்திச் சேவையை ஆரப்பித்து வைத்தேன். அரசினர் உதவிபெற்று கிராமங்கள்தோறும் கிணறுகள் கடடுவித்தேன். கரைச்சிப்பகுதியில் 4000க்கு அதிகமான குடிம்பங்களைக் குடியேற்றினேன்,

வரணி அரசாங்கசிரேஷ்ட பாடசாலை, சாவகச்சேரி திறைச்சேரி கந்தோர், பல அரசாங்க சிரேஷ்டபாடசாலை வரணி காலைஸ்தலம், கிளிநொச்சி நீதிமன்றம் ஆகியவற்றையும். 60க்கு அதிகமான இலவசதபால்நிலையங்களையும். 60ககு அதிகமான சிறுபாடசாலைகளையும் உருவாககினேன். நூற்றுககணகான வாலிபர்களுககு வேலைபெற்றுககொடுத்திருககிறேன்,

எனது முயற்சியினுல்தான் சுன்னுகத்தில், மத்திய மின்சார நிலையம் நிறுவப்படடது. யாழ்ப்பாணம்தொழில் நுடப கல்லூரியும்' என் முயற்சியால் தான் நிறுவப்பட்டது

எடுத்தேன். அவர் போட்ட உப்பளத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படாவிடிலும் இதனை தேசிய அரசாங்கம் ஏற்றுள்ளது.

கே மகாவலிகங்கை வடக்கே வராது என்று சிலர் கூறுகிறுர்களே. அதை எப்படி வடக்கே கொண்டுவர முடியும்?

ப: அது சுலபமான வேலை. மகாவலியை வரவேற்க யாழ்ப்பாணம் தயாராக இருக்கிறது. 1955-ம் ஆண்டே இதற்கு முன் ஏற்பாடாக இங்கு 20 மைல் நீள கால்வாயை வெட்டி வைத்திருக்கிறேன். மல்வத்துஓயாவிற்கு வரும் மகாவலிகங்கையை ஒட்டி சுட்டானுக்கு திருப்பவேண்டும். கனகராயன் ஆற்றை மறிச்சுக் கட்டினதுதான் இரணைமடுக்குளம். இக்குளத்திற்குக் கொண்டு வந்து முள்ளியான் ஊடாக 20 மைல் வாய்க்காலினுல் தொண்டமனுற்றுக்கு கொண்டுவரலாம். இடது பக்கம் மகாவலியை பாலியாற்றுடன் தொடுக்கவேண்டும். பாலியாற்றைமறிச்சுக் கட்டினதுதான் வவனிக்குளம், போதிய பணமிருந்தால் 3 வருடத்தில் கங்கையை வடக்கே திருப்பலாம்.

## திறப்பு விழா

சங்கானை, வியாழன்

'நீண்டகாலமாக மின் ஒளியை எதிர் பார்த்திருந்த சண்டிலிப்பாய் வாசிமக்கள் ஆசை இன்று பூர்த்தியடைவதில் நான் மகிழ்சியடைகின்றேன். மின்சாரத்தை நன்கு பயன்படுத்துவதன் மூலம் தொழிற்சாலைகள் போன்றவற்றை இப்பகுதியில்ஸ்தாபிக்கமுடியும் இதன் மூலம் மக்கள் பயனடைவதுடன் வேலை இல்லாத்திண்டாட்டமும் எம்மிடையே ஓர் அளவில் தீர ஏதுவாகும்.

இவ்வாறு சண்டிலிப்பாய் கிராம உப மின்சாரநிலையத் திறப்பு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசிய சங்கானை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் பேஸஅரியமலர் யோகராசா கூறினுர்.

திரு. வ. செல்வத்துரை பேசுகையில்:- சண்டிலிப்பாய் வாசிகள் பலர் மின் ஒளிபெறுவதற்கு முற்பணம் கட்டியும் பலதரப்பட்ட கஷ்டங்களை அடையவேண்டியிருந்தது. திரு. க. தம்பையாவின் ஒத்துழைப்புடன் மின்சார இலாக உதவியை நாடியதன் பலன் இன்று சண்டிலிப்பாய் ஒளிமயமாகியது இதை நாம் நல்லமுறையில்பயன்படுத்து வேண்டும்.

கல்வளை விநாயகர் வீதியில் அமைந்துள்ள இவ் உப-மின்சார நிலையத்திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவடபகுதி மின்சார அதிபர் திரு. ஏ. ஜே சோமசுந்தரம் மின்சார நிலையத்தை திறந்துவைத்தார்.

அமைத்துள்ளனராம் இந்திய எஞ்சினீயர்கள். இதனுல் இத்தேரை இழுக்க இப்போது 2,500 பேர் போதுமானதாக உள்ளதரகவும் செய்தி தெரிவிக்கின்றது.

0 0 0

சிறிய உருவத்திலுள்ள சுவாமிக்கு இவ்வளவு பெரிய தேர் ஏனென்று பல வருடங்களுக்கு முன் கொழும்புச் சுவர்கள் நம்மைச் சில கேள்விகள் கேட்டிருந்தன. திருவாரூர்த் தேரை மேலான சிற்பக் கலையுடன் இவ்வளவு பெரிதாக அமைத்துள்ளவர்கள் அவ்வளவு முட்டாள்களாக என்ற பட்டத்தைக் கரகோஷத்திற்கிடையே அளித்தது குறிப்பிடத்தக்கது. மூன்று சங்கீதபூஷணங்கள் பின்னணி இசையில் கலந்து கொண்டதை அன்றுதான் பார்த்தேன். கொக்குவில் கலாபவனத்தைச் சேர்ந்த கலைச்செல்வர் நட்டுவாங்கம் சுப்பையா நல்ல பயிற்சி அளித்திருக்கிறுர். அவரது கலைப் பணியை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

இச்செல்வியின் தந்தையார் சேனுதிராசா சிறுவயதில் பெண் வேடம் தரித்து பரதம் ஆடியுள்ளாராம்! கலைச்செல்வம் பரம்பரைச் சொத்துப்போலும்!

## எலும்புகளுக்குகிராக்கி
### உரப்பசளைக்கு நல்லவிலை கொடுத்து வாங்குகிறுர்கள்

யாழ்ப்பாணம் வெள் கிளிநொச்சி, பூனகரிப்பகுதியில் பலர் காடுகளில் மிகு க எலும்புகளைப் பொறுக்கிச் சேர்த்துக் கொழும்புக்கு அனுப்புகின்றுர்கள். அண்மையில் எலும்பு சேர்த்து உரப்பசளை தயாரிக்கும் ஸ்தாபனங்கள், எலும்புகளை நல்ல விலைகொடுத்து வாங்கியுள்ளார்கள். விவசாய அபிவிருத்திக்கு பசளை வகைகள் பெருந்தொகையாக வேண்டியிருப்பதாலும் வெளிநாட்டுப் பசளைக் கொள்முதல்களைப் படிப்படி அரசாங்கம் கட்டுப்படுத்தியும் விட்டது. பல லொறிகள் தினமும் வெறு லொறிகளாக இப்பகுதிக்கு வந்து பெரும் தொகையான எலும்புகளையும் காடுகளில் சேர்த்தவர்களிடம் வாங்கிச் செல்கிறது.

## வகுப்புவாதசக்திகள் ஜனநாயகத்துக்கு ஆபத்து

— திருமதி காந்தி

புதுடில்லி, மே 21

ஒரு மதம் அல்லது இனம் இன்னென்றைவிட உயர்வானது என்று பிரசாரம் செய்வது தவருகும் என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

'ஜனநாயகமும் சோஷலிஸமும்' என்ற தலைப்பில் ஒரு கூட்டத்தில் திருமதி இந்திரா காந்தி சொற்பொழிவாற்றினுர்.

வகுப்புவாதச் சக்திகள் ஜனநாயகத்திற்கு ஆபத்தானவை. இவை குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

மதம் மொழி இவைகளின் பெயரால் மக்களைத் தம் சுயநலத்திற்கு சில சக்திகள் பயன்படுத்திக்கொள்ள எ தனிக்கின்றன என்றுர் அவர்.

## தேர்தல் சட்டத்...

(1-ம் பககத்தொடர்ச்சி)

செல்லக கூடாது.

(8 தேர்தல் தினத்தன்று ஒழுங்கீன்மாக, நடந்து கொள்பவர்கள் மீதும் அடிபிடிசண்டை வாககாளரிடம் தலையிடுதல் ஆகியவைகளில் ஈடுபடுபவர்களும் அன்று முழுவதும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்படுவர்.

(9) வாக்களிக்கு முன்னரும் வாக்களித்தபின்னரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்னரோ கடைகளிலோ கூட்டமாக நிற்க அனுமதியளிககப்படமாட்டார்கள்.

(10) ஐம்பது பேருககதிகமாக யாரும் தேர்தல் தினத்தன்று கூடி நிற்க அனுமதிககப்படமாடடார்கள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு [illegible] 22-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org